292

292

Regd. No. M. 2210 வருஷ சந்தா ரூ. 1-8-0

Authoress & Proprietrix } வை. மு. கோதைநாயகி அம்மாள்.
(MRS. V. M. PARTHASARATHY IYENGAR)

ஜகன்மோகினி

JAGANMOHINI

மாதாந்த நாவல் சஞ்சிகை

20 APR 1933

மலர் 10 ‖ 1933ஷ மார்ச்சு மீ ‖ இதழ் 4

50 ரூபாய் பரிசுகள்

நீங்கள் சற்றும் எதிர்பாராது
உங்களை நாடி வந்துள்ள
புதிய நாவல்
எது ?

சோதனையின் கொடுமை

அல்லது

செல்வமே சொர்க்கம்

முழு விவரங்களுக்கு இதனுள்ளிருக்கும்
விளம்பரத்தைக் கவனியுங்கள்

JL
ஊ211,N245M
M33·10·4,
210040

"...மோகினி" ஆபீஸ்,
...ரு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

குறிப்பு:—ஒவ்வொரு மாதமும் கடைசித்தேதியில் சஞ்சிகை வெளியாகும்.

50 ரூபாய் பரிசுகள்
ஒரு வருஷ சஞ்சிகை இனம்

ஏப்ரல் மாதம் 25 தேதிக்குள் சேரும் சந்தா நேயர்களுடைய நம்பர்களைக் குலுக்கிப் போட்டு 6 சீட்டுகள் எடுத்து அவற்றிற்குப் பின்வரும் விவரப்படி பரிசுகள் கொடுக்கப்படும்.

முதல் பரிசு ரூ. 15 3-வது பரிசு ரூ. 10
2-வது பரிசு ரூ. 10 ஐந்து ரூபாயில் மூன்று பரிசுகள்

ஏற்கெனவே சந்தா செலுத்தியவர்களும் மேற்கண்ட பரிசுப் போட்டியில் கலந்துகொள்ள வேண்டுமோயின் குறைந்தது ஒரு புதிய சந்தாவைச் சேர்த்தனுப்பவும். ஒரு வருஷ சஞ்சிகை இனமாக வேண்டுவோர் ஐந்து சந்தா நேயர்களைச் சேர்த்தனுப்பவேண்டும்.

மகான் அரவிந்தர்

மனைவியாருக்கு எழுதிய கடிதம்

புதுச்சேரியில் தவராஜ யோகியாக விளங்கும் மகான் அரவிந்த கோஷ் சுமார் இருபதாண்டுகளுக்கு முன் தமது மனைவியாருக்கு எழுதிய அரிய கடிதம் இந்நூலில் அடங்கியிருக்கிறது. இதில் அரவிந்தர் பெருமை, அவரது அற்புத தேசபக்தி, சிறந்த தெய்வபக்தி, மாதர் கடமை யாதியன விளங்கும். சிறந்த காகிதத்தில் பெரிய கொட்டை யெழுத்துக்களில் அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. இரண்டணாத் தபால் தலை அனுப்புவோருக்கு ஒரு பிரதி கிடைக்கும்.

"லோகோபகாரி" பத்திரிகாலயம்,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

20 APR 1933

6-வது அதிகாரம்

ஆத்திர தேவதையின் சூத்திரப்பாவை.

திடீரென்று கைதியாக்கப்பட்ட சுகுமாரன் வெகு தைரியத்துடன் போலீஸாரை நோக்கி "ஐயா! நாங்கள் கைதியாகியதைப் பற்றிக் கவலைப்படுவதாகச் சற்றும் எண்ண வேண்டாம். புரட்சி இயக்கத்தில் சேர்ந்ததாக அனுமானித்ததற்கு ஆதாரம் என்னவிருக்கிறது?" என்று கம்பீரமாய்க் கேட்டான்.

போலீஸார்:—ஐயா! ஆதாரமில்லாது நாங்கள் வாரண்டு கொண்டுவரமாட்டோம். எங்களுடைய சட்டப்படிக்கு நாங்கள் இந்த வீட்டைச் சோதனை போடவேணும்—என்று சொல்லிவிட்டு உடனே சுகுமாரனின் பெட்டி, பீரோ முதலிய சகலமானவற்றையும் சோதனை போட்டார்கள். அவைகளில் சில கடிதங்கள் கிடைத்தன. அக்கடிதங்களை எழுதியவர்கள் ஏற்கெனவே புரட்சி இயக்கத்தில் சம்மந்தப்பட்டதாகப் பிடித்துக் கைதியாக்கி இருக்கும் மனிதர்களாவார்கள். ஆகையினால் அதையே ஓர் ஆதாரமாகக் கொண்டு இவர்களைக் கைதியாக்கி நால்வரையும் ஓர் வண்டியில் ஏற்றி அழைத்துச் சென்றுவிட்டார்கள். மற்ற மூவருடைய வீடுகளைச் சோதனை போட்டதில் பலமான சந்தேகத்திற்கு ஆதாரங்கள் கிடைத்துவிட்டதால் அவர்களைக் கொண்டு சிறைச்சாலையில் வைக்கும்படிக் கமிஷனர் துரையின் உத்தரவு பிறந்துவிட்டது.

சிறைச்சாலைக்கு இவர்களைக் கொண்டு லாக்கப்பு செய்துவிட்டார்கள். சுகுமாரன் இவ்விதம் தான் கைதியாகப் போவதாய்க்

சிலர் தங்கள் சொந்த மனிதர்களுக்குப் பணம் நிறைய வராவிடினும் மாதம்...... இத்தனை ஆயிரத்திற்குக் குறைவில்லை என்று ஜம்பம் பேசுவது. உண்மையை விசாரிக்கும்போது எல்லாம் வெளியாகி விடுகின்றது.

210040

கனவிலும் கருதவில்லையாதலால் அந்த சம்பவம் அவனுக்கு மிக்க அதிர்ச்சியைக் கொடுத்தது. ஏனெனில் தன் தாயார் ஏற்கெனவே தமக்கையின் விஷயமாக மனம் நொந்து புண்ணாகிவிட்டாளாதலால் தன்னுடைய இச் செய்தியைக் கேட்டதும் இடிந்து உயிரையே விட்டுவிடுவாளே! என்ற அவ்வொரு காரணத்திற்காக மனவருத்த முற்றான். சிறைச்சாலையைக் கண்டதும் நர்மதையின் நினைவே உண்டாகியது.

தன்னுயிரினும் மேன்மையான கணவன் பொருட்டு வேண்டுமென்றே குற்றவாளியாகிக் கஷ்டத்திற்கு இலக்காகிய நர்மதையின் தியாகத்தைப் பாராட்டினான். நர்மதையைத் தான் வெகு பக்ஷமாய் மதித்திருப்பதனால் தானும் அவளைப்போல சிறையின் அனுபவத்தைக் காண நேரிட்டதுபற்றி சந்தோஷித்தான். சிறைச்சாலையிலுள்ள குற்றவாளிகளை எல்லாம் பார்த்து வியப்புற்றான். ஸ்திரீகளின் சிறைச்சாலையில் விவரித்தவாறு ஆண் கைதிகளும் வெகு சந்தோஷமாகக் காலந்தள்ளுவது சுகுமாரனுக்கு கூறத் திறமற்ற வியப்பையுண்டாக்கிவிட்டது.

சுகுமாரனுக்குக் காலை ஆகாரம் கொண்டு கொடுக்க ஓர் ஆள் உள்ளே வந்தான். அவனோடுகூட வார்டரும் ஒருவனிருந்தான். அக் கைதிகளின் கையினால் ஆகாரம் சாப்பிடுவதற்குச் சுகுமாரனுடைய மனம் கூசியது. அவனை நோக்கி "நீ எந்த குற்றம் செய்தவன்?" என்று சுகுமாரன் கேட்டான். அதற்கு அந்த கைதி சற்றும் விசனிக்காமலும் வெட்கமுறாமலும் நகைத்துக்கொண்டே "ஆமாம். போயே எனக்கு எத்தனையோ சத்ருக்கள் உண்டு. அவர்களில் ஒருவரை நான் கஷ்டப்படாமல் மேல்லோகத்திற்கு அனுப்பிவிட்டதற்காக என்னை இந்த அரசாங்கம் இப்படி ஆட்டுகிறது. பகையாளியை ஏன் கொல்லலாகாது? அதற்கு என்ன தப்பு?" என்று தாறுமாறாக உளற வாரம்பித்துவிட்டான்.

உலகமே பணத்தின் மறைவில் கிடக்கின்றது. ஒரு அணுமத்துப் பணம் வருகிறதென்றால் அதற்குப் பாத்தியமுள்ளவர்கள் சண்டையும் வழக்கும் தொடங்கி ஒருவரையொருவர் திட்டுவதும் 'பணப் பேராசை

இதற்குள் வார்டர் அவனை மிரட்டி யனுப்பிவிட்டு "ஐயா! கைதிகளின் கதைகளைக் கேட்டால் வேறு நாவல் படிக்கவேண்டாம். ஒவ்வொன்றும் ஒவ்வொரு ருசிகரமான விஷயமாகவிருக்கும். இந்த மனிதன் சாமானியனல்ல. தான் செய்துவிட்ட வேலையினால் பித்தம் பிடித்துப்போய்த் தாறுமாறாக உளறுகிறான். இவனுடைய சொந்த தங்கையையும், அவள் புருஷனையும் தன் கைகளாலேயே கொலை செய்த மகா பாவி இவன். குரும்பாகப் பேசி விளையாடுவதே தங்கையின் புருஷனுடைய சுபாவமாம். அவன் ஒரு தினம் வேடிக்கையாக "எனக்கு என் வீட்டில் புதையல் அகப்பட்டது. நான் அதை இவ்வீட்டிலேயே ஓர் இடத்தில் புதைத்து வைத்திருக்கிறேன்" என்று கூறினானாம்.

அது சமயம் அவனுக்கு நல்ல வரும்படி வந்துகொண்டிருந்ததால் அவன் சற்று அதிகமாகச் செலவிடவாரம்பித்தான். இந்த மடையன் 'அவன் சொல்லியது உண்மைதான்; அந்தப் புதையல் பணத்தைத் தான் இவ்விதம் செலவழிக்கின்றான்' என்று எண்ணித் தீர்மானித்து, அந்தப் பணத்தை முற்றும் தானே அடைய ஆசைகொண்டு, அவர்களை ஓசை செய்யாமல் கொன்றுவிட்டு புதையலைத் தூக்கிக்கொண்டு எங்கேனும் ஓடிவிடலாம் என்ற நெஞ்சழுத்தம் வந்துவிட்டது.

உடனே ஒரு தினம் நடு நிசியில் அவ்விருவரையும் சற்றும் தாக்ஷண்யமின்றிக் கழுத்தை வெட்டி விட்டு, வீடு பூராவும் தோண்டிப் பார்த்தான். எங்கும் ஒன்றும் காணாமையினால் மனமிடிந்து விட்டது. இவனுடைய போதாத காலக் கொடுமையினால் இப்புத்தி தோன்றியது. உடனே அகப்பட்டுக்கொண்டான். இது தான் செய்தி. இதை மறைக்கப் பல விதமான காரணங்களைக் கூறிப் பார்த்தான். கடைசியில் ஆயுள்காலம் வரையில் இந்த அனுபவந்தான் ஏற்பட்டது. உம்: இன்னும் இதுபோல அனேக

யினால் செய்கிறான்' என்று தூற்றுவதுமாகிறார்கள். உண்மையில் இருவரும் பணப் பேராசை கொண்டுதான் போராடுகின்றார்கள் என்பதைத் தாம் உணராவிடினும் பிறருமா உணர மாட்டார்கள்?

விஷயங்கள் இங்கு இருக்கின்றன." என்று கூறிவிட்டுப் போய் விட்டான்.

இந்த ஒரு விஷயமே சுகுமாரனுக்கு கூறத்திறமற்ற வியப்பை யுண்டாக்கிவிட்டது. அவன் அங்குள்ள கைதிகளை எல்லாம் ஒவ்வொருவராய் விசாரித்துக்கொண்டும், அவர்களுக்கு நல்ல புத்தி சொல்லியும், நல்ல கதைகளைக் கூறியும் தன் பொழுதைக் கடத்த லானன். அவனுடைய எண்ணத்தில் தான் தாயைப்பற்றியே விசாரம் குடிகொண்டிருந்தது. அங்கு தன்னைப் பார்க்க வந்த சிநேகிதனிடம் விஷயத்தைக் கூறித் தன் தாயை விசனப்படாமல் தேறுதலடையும்படியாகச் சமாதானம் செய்வதற்கு அவனையே ஊருக்கு அனுப்பிவிட்டான். சிநேகிதனும் சுகுமாரனுடைய வார்த்தைப்படிக்கு அன்றே கோமளவல்லியின் வீட்டுக்கு வந்தான்

சுகுமாரன் முதலியவர்களின் விஷயமாகப் போலீஸார் வெகு வாய் ஆராய்ச்சி செய்துகொண்டு வருவதால் அதன் உண்மை விளங் கும் வரையில் இவர்களுடைய கேஸ் விசாரிக்கப்படமாட்டாது. அது வரையில் லாக்கப்பில்தான் இருக்கவேண்டும். ஆதலால் சுகு மாரனும் மற்றவர்களும் சந்தோஷமாகவே காலத்தைக் கழிக்கலா னர்கள்.

இவ்விதம் இருக்கும் நாளில் தான் நமது கதாரத்தினமாகிய திலகவதி தன் உபாத்தியாயினியுடன் நாம் முன்பு தெரிவித்தபடி சிறைச்சாலைக்கு வந்தாள். அதே சிறையில் அங்கச்சியம்மாளுக்கு உறவினன் ஒருவன் காங்கிரஸ் கைதியாக இருக்கிறன். அவனைப் பார்ப்பதற்கு அவன் சொந்த மனிதர் அன்று செல்வதை யறிந்து அங்கச்சியம்மாளும் அவள் புருஷனும் முன்பு சொன்ன மனிதரு டன் இங்கு வந்து இறங்கினர்கள்.

தருமம் செய்வதில் இரண்டு வித மார்க்கங்கள் உண்டாம். தானே கொடுப்பது ஒன்று; பிறரைக் காட்டி விட்டுத் தான் விலகிக்கொள்வ தொன்று. இரண்டாவது தருமத்தையே அனேகம் பெரிய தனிகர்கள் செய்கின்றூர்கள்.

எமனைக் கண்டு அலறுவதுபோல அலறிய திலகவதிக்கு நிலையே புரண்டுவிட்டது. அவளால் நிற்கவும் கூடாது தலை சுழல வாரம்பித்தது. தத்தளித்த நிலைமையில் தவித்து நிற்கும் மாறுபட்டத்தை அருகிலிருந்த சங்கரிபாய் பார்த்துவிட்டாள். எக்காரணம் பற்றித் திலகவதி இத்தகைய மாறுதலை யடைந்துவிட்டாள் என்றதை யறியாத சங்கரி "திலகவதி! ஜெயிலைப் பார்த்ததும் உனக்குப் பயமாக விருக்கிறதா! திருடர்களையும், கொலைக்காரர்களையும் காண வேண்டுமே என்று நீ பயப்படுகிறாய் போல உன் முகம் காட்டுகிறதே! ஏனம்மா! உனக்குப் பயமா யிருந்தால் வீட்டிற்குப் போய் விடலாமா?" என்றாள்.

திலக:—தாயே! எனக்கு அந்த விதமான பயம் எதுவுமே இல்லை. தங்களிடம் நான் முதலில் பயந்ததுபோல அதோ அவ் வண்டியிலிருந்து இறங்குகின்றவர்கள்தான் எங்கள் வீட்டுக்காரர்கள். நான் ஏதோ ஆசையின் கொடுமையினால் அவர்களுக்குத் தெரியாமல் வந்துவிட்டேன்; என்னை இந்நிலைமையில் பார்த்தால் அவர்கள் கோபிப்பார்களே! அதுதான் எனக்குப் பயமாக விருக்கிறது. 'தினம் இவள் பள்ளிக்கூடம் போவதாகக் கூறிவிட்டு இவ்வாறுதான் ஊர் சுற்றுகிறாளோ!' என்று சந்தேகித்து வீட்டில் எனக்குச் சரியானபடி தண்டனை யளிப்பார்களே! என்ன செய்வேன்? தாயே! நான் பெற்றோரற்ற அனாதை; இவர்களால் காப்பாற்றப் பட்டு வருகிறேன். இந்த அம்மாளும் சரி; கொடிய பதினாறடி வேங்கையும் சரி. உங்களுக்கு இந்த ஒரு உதாரணமே போதும். நான் என்ன செய்வேன்?

சங்கரி:—இந்த அம்மாள் உன்னை நடத்துகிற கொடுமைகள் முன்பே இன்னொரு வாத்தியாரம்மாள் மூலம் எனக்குத் தெரியும். நீ இதற்காகப் பயப்படாதே! உன்னுடைய இந்த ஆபத்திலிருந்து

சிறு குழந்தைகளுக்கு எதைப் போதித்துப் பழக்குகின்றார்களோ, அதைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொள்வது சகஜம். பெரியவர்கள் சொல்லக் கூடிய பெரிய பெரிய வார்த்தைகளைக் கூறி 'இவ்விதமெல்லாம் அக் குழந்தை சொல்லி யழுகிறது' என்று சிலர் சப்பக் கட்டு கட்டுகிறார்கள். குழந்தைக்கு அவ் வார்த்தையின் கருத்தேனும் தெரியுமா?

தப்புவதற்கு நான் வழி செய்கிறேன். நீ பேசாமலிரு. நடுக்கம் வேண்டாம்—என்று தைரியம் கூறித் திலகவதியைத் தட்டிக் கொடுத்துத் தன் கையினல் அணைத்துக் கொண்டாள்.

வண்டியை விட்டு இறங்கிய அங்கச்சியம்மாள் அங்கு நிற்கும் திலகவதியை முதலில் கவனிக்கவில்லை. பிறகு பதுமைபோல நிற்கும் அவளைக் கண்டதுதான் தாமதம் புஸ் ஸ்ஸ் என்று சீறித் தலையைத் தூக்கிப் படமெடுக்கும் நாகத்தைப் போல தலையை உயர்த்திக் கண்கள் பிதுங்கப் பார்த்தாள். தான் கனவிலும் நினையாத விதம் திலகவதி இங்கு நிற்கும் காட்சி அவளுக்குக் குபீரென்று பற்றிக்கொண்டது. உடனே தன் கணவனை நோக்கி "இதோ பார்த்தீர்களா அனியாயத்தை! நான் சொல்வதை எல்லாம் வெறும் புரட்டல் என்றும், அனியாயமாய்க் கூறுவதாயும் சொல்லி என்னைத் திட்டுகிறீர்களே! 'இந்த தடிச் சிறுக்கி பாட சாலைக்குப் போவதாகச் சொல்லி விட்டுக் கண்ட விடமெல்லாம் திரி கின்றாள். யார் யாருடனே துஷ்ட சகவாஸம் செய்கிறாள்' என்று அன்று நான் சொல்கையில் கோபம் பொங்கிவிட்டது. இப்போது நீங்களே நேரில் கடவுள் கொடுத்த கண்ணால் பாருங்கள். இனி யாவது நம்பிக்கை வருகிறதா பார்க்கலாம். என் வார்த்தையை அலக்ஷ்யம் செய்வதிலும், என்னைத் திட்டிவிட்டு அந்த அல்பத்திற்குச் செல்வாக்குக் கொடுப்பதிலும் தான் உங்களுக்கு நாட்டம். இப்போது திலகவதியின் பவிஷைப் பாருங்கள்." என்று வீதியி லேயே அபிநயக் காட்சியோடு ஆடினாள்.

அங்கச்சியம்மாளின் வார்த்தையில் அதுவரை நம்பிக்கை கொள்ளாதிருந்த *கணபதிக்கு அங்கு திலகவதியைப் பார்த்ததும் மனத்தில் சடக்கென்று மாறுதலே உண்டாகியது. சங்கரிபாய் நன்றாகப் புது நாகரிகப்படி அலங்கரித்துக்கொண்டு ஷோக்காக நிற்பதும், அவளுடைய அணைப்பில் திலகவதி நிற்பதும் பார்த்தால் அவர் மனத்தில் வேறு விதமான வித்யாச எண்ணமே உண்டாயிற்று.

---

*அங்கச்சியம்மாளின் புருஷனுடைய பெயர் பசுபதி என்று இதற்கு முன்னிருப்பதை கணபதி என்று மாற்றிப் படிக்கவும்.

அவரும் திலகவதியைச் சுடச் சுடப் பார்த்தார். அங்கச்சியம்மாளை நோக்கி "அடீ! இது பப்ளிக் தெரு. இங்கு ஆவேசப்பட்டு ஏதும் இறையாதே! கும்பு கூடி உன் கூப்பாட்டையும் கூத்தாட்டத்தையும் வேடிக்கை பார்ப்பார்கள். அந்த தடிக்கழுதையுடன் நீ இப்போது ஒன்றும் பேசவேண்டாம். நாம் அவர்களைக் கண்ணால் பார்த்துவிட்டோம். இனி இங்கு வரவில்லை என்பதைப்பற்றி அவள் மறுத்துக் கூற முடியாது; ஆதலால் பேசாது நாம் வந்த காரியத்தை முடித்துக்கொண்டு போவோம்.'' என்று அவளை யடக்கி விட்டார்.

உள்ளே சென்ற இன்ஸ்பெக்டர் வந்துவிட்டார். அதுவரையில் திலகவதி அவர்களைப் பார்க்காதவள்போல வேறு முகமாகத் திரும்பி நின்றிருந்தாள். இன்ஸ்பெக்டர் கூப்பிட்ட உடனே அப்போதும் பார்க்காதவள் போலவே, 'கடவுள் விட்ட வழியாகட்டும்' என்று எண்ணிக் கடவுளைத் துதித்தவாறு உள்ளே சென்றுவிட்டாள். ஜெயிலுக்குள்ளே கைதிகள் வேலை செய்யும் இடம் முதல் அவர்களை லாக்கப்பு செய்யும் விடுதி வரையில் பார்க்க அனுமதி கிடைத்திருந்ததால் இன்ஸ்பெக்டர் ஒவ்வொரு இடமாக இவர்களை அழைத்துக் கொண்டுபோய்க் காண்பித்துக்கொண்டே வந்தார்.

கைதிகளைப் பார்க்கையிலேயே திலகவதியின் மனத்தில் ஒரு விதமான அச்சமும், பயமும் கூடி வருத்தியது. "ஐயோ! இத்தனை பேர்களும் கைதிகளா! கொலைக்காரர்களா! ஒரு உயிரைக் கொலை செய்யவேண்டுமென்றும் மனம் தோன்றுமா! அப்பப்ப!'' என்று வியந்தவாறு பார்க்கிறாள். அவள் மனத்தில் 'சுகுமாரன் இருப்பிடத்திற்கு எப்போது போவோம்?' என்ற எண்ணமே தலை தூக்கி நிற்கிறது. தன்னைப் பார்த்தவுடன் சுகுமாரன் தன்னைத் தெரிந்த பாவனையாகக் காட்டிக் கொள்ளாதிருக்கவேண்டுமே என்கிற பயம் ஒன்று. அதைத் தான் எவ்விதம் தெரிவிப்பது என்கிற யோசனை யொன்று. இவ்விதமே உலப்பப்பட்டவளாய் பார்த்துக்கொண்டு

தமக்கு விரோதிகளான மனிதர்களைப் பார்க்கும்போதே அவர்கள் மனத்தின் வெறுப்பை முகம் காட்டிவிடுகின்றது. ஆனால் அதை சமாளித்து அடக்கிக்கொண்டு வெகு பட்சமுள்ளவர்கள்போல விசாரிப்பது. இந்த வேஷம் யாருக்காகப் போடவேண்டுமோ!

வருகையில் தேசிய இயக்கத்தினல் கைதியானவர்கள் இருப்பிடம் வந்து சேர்ந்தார்கள்.

அங்குள்ள எல்லோரும் சந்தோஷமாகத் தம்தம் கடமையைச் செய்துகொண்டு குசாலாக விருப்பது பார்ப்பதற்குச் சந்தோஷமாயும் ஆச்சரியமாயுமிருந்தது. இன்ஸ்பெக்டர் "இவர்கள்தான் தேசியக் கைதிகள்" என்று காட்டினர். தான் நாடி வந்த தேவதை இங்குதான் இருக்கவேண்டும் என்று எண்ணிய திலகவதி வெகு ஊக்கத்துடன் கவனித்து வந்தாள்.

சிறைச்சாலையில் இருக்கும் கைதிகளுக்கு ஜெயிலைப் பார்க்க யாரேனும் வந்தால் பெருத்த சந்தோஷம் உண்டாகி விடும். வரும் மனிதர்களை, சர்க்கரையை ஈ மொய்ப்பது போல மொய்த்துக் கொண்டு பேசுவது சாதாரணக் கைதிகளுக்கும்,தேசியக் கைதிகளுக்கும் வழக்கம். அதிலும் சற்று தமக்குத் தெரிந்தவர்களாகவே வந்து விட்டால் கேட்கவே வேண்டாம்.

அங்குள்ள சிலர் இன்ஸ்பெக்டர் நாராயணனைத் தெரிந்தவர்களாதலால் அவருடன் பேசி க்ஷேம லாபங்களை விசாரிக்கலானர்கள். நமது திலகவதியின் விழிகள் சுகுமாரனைத் தேடுவதிலேயே சென்று சுழன்றுகொண்டிருந்தன. அந்த ப்ளாக்கு நீண்டு வாட்டமாக அமைந்திருந்தது. அதன் கோடியிலுள்ள அறையில், கையில் ஒரு புஸ்தகத்தை வைத்துக்கொண்டு சுகுமாரன் படித்தவண்ணம் படுத்திருந்தான்.

அந்த புத்தகம் ஓர் அருமையான நாவலாகும். அதில் அவன் படிக்கும் பாகமானது மனத்தை யுருக்கிக் கண்ணீரைப் பெருக்கச் செய்யும் அத்புதமான பாகமாகையினல் அதைப் படித்துக் கண்ணீர் பெருகியவாறு படுத்திருந்தான். திலகவதி தான் நெடுகப் பார்த்

---

* எந்த விஷயமாயினும் அதன் சம்மந்தப்பட்டவர்களோ, அதனல் பாதிக்கக் கூடியவர்களோ மனத்தில் அடக்கிக்கொண்டு கடு, கடு என்று முகத்தைக் காட்டாமல், நேருக்கு நேர் உடைத்துப் பேசி விடுதல் மிகவும் உத்தமமான காரியம்.

துக்கொண்டே தனித்துச் சென்றாள். அவள் தேடிவந்த பொருள் அந்த உள்ளுக்குள் இருப்பதைக் கண்டவுடன் ஒரு புறம் மிகுந்த சந்தோஷமும், மற்றொரு புறம் பயமும் கொண்டவளாய் வெளிப் புறம் தாழ்வாரத்திலேயே நின்றாள். சுகுமாரன் திலகவதி அங்கு வரப்போகிறாள் என்பதைக் கனவிலும் கருதவில்லை யாதலால் அவன் படிக்கும் ஆநந்தத்தை விட்டுத் திரும்பவில்லை.

திலகவதி தான் இங்கு நிற்பதையும் பார்ப்பதையும் சங்கரி முதலியோர் கண்டுவிட்டால் மெத்த கஷ்டமாகி விடும் என்று எண்ணியவளாய்த் தான் பேசாது திரும்பிச் சென்றுவிடுவதே நலம் எனத் தீர்மானித்தாள். அவளுடைய மனம் அதற்கு இடங் கொடுக்கவில்லை. "சுகுமாரன் கண்ணீர்;பெருக்கியவாறு படுத்திருப் பதன் காரணம் யாது? அதை யறியவேண்டுமே!'' என்ற எண்ணம் உதித்தது. உடனே அவ்விடத்தில் நின்றபடியே "ஸ்வாரஸ்யமாய்ப் படிப்பதை நான் தடை செய்வதற்காக மன்னிக்க வேண்டும்.'' என்றாள்.

சற்றும் எதிர்பாராத இம்மொழிகள் யாழை மீட்டுவதுபோ லான மாதுர்யமாய் சுகுமாரனின் செவியில் பட்டதும் அவன் அலறி யடித்துக்கொண்டு திரும்பினான். அவன் தன் கண்களையே நம்பாது ப்ரமித்தவாறு "ஹா கஸ்தூரிபாய்! உண்மையில் நீதானா! இதென்ன ஆச்சரியம்!'' என்று கூறிக்கொண்டே வெளியில் வந்தான்.

இதற்குள் திலகவதியைப் பின்பற்றி சங்கரியும் ஓர் வார்டரும் விரைவில் வந்துகொண்டிருப்பதைக் கண்ட திலகவதி சற்று அச்சத் தோடு "இப்போது எந்த விஷயமும் பேசவேண்டாம். நான் இன் னார் என்று தமக்குத் தெரிந்தபாவமே காட்டிக்கொள்ளவேண்டாம். என் மனம் பதைத்த பதைப்பைக் கூறமுடியாது. தங்களைப் பார்த்துவிட்டுச் செல்வதற்குப் பிரம்மப் பிரயத்தனங்களைச் செய்து கொண்டு வந்தேன். அதோ அவர்கள்...என்று பேசுவதற்குள்

அவர்களும் நெருங்கிவிட்டார்கள். திலகவதி எதையும் அறியாத வள்போலப் பின்னும் போய்க்கொண்டே இருந்தாள்.

இதைக் கண்ட வார்டர் "அம்மா! இதென்ன நீங்கள் தனிமையில் இப்படி வந்துவிட்டீர்களே! அவ்வாறு வந்து ஒருவருடனும் பேசலாகாது. அது ஜெயில் ரூலுக்கு விரோதமானது." என்று சற்று கண்டிப்பாய்க் கூறினன்.

திலக :—ஐயா! எனக்கு அந்த ரூலைப்பற்றித் தெரியாது. நெடுகப் பார்க்கலாமோ என்னவோ என்று நான் வந்துவிட்டேன். நான் இங்கு ப்ரத்யேகமாய் எவரையும் பார்க்க வரவில்லை. ஜெயில் முற்றும் பார்க்கவேண்டுமென்கிற அவாவினல் போலீஸ் இன்ஸ்பெக்டருடன் வந்தேன். இனிமேல் உங்கள் ரூல் தெரிந்தது. தெரியாது செய்ததற்கு மன்னிக்கவேண்டும்—என்று வெகு வினயத்துடன் கூறினள்.

அதற்குமேல் வார்டர் எதுவும் பேசவில்லை. சங்கரிபாயும் திலகவதியும் மற்ற எல்லா இடங்களையும் அந்த வார்டருடன் கூடவே சென்று பார்த்தார்கள். இதற்குள் இன்ஸ்பெக்டர் அவ்விடம் வந்து சேர்ந்தார். சுகுமாரன் முதலிய நால்வரையும் பார்த்தார். அதில் ஒருவன் நாராயணனுக்குத் தெரிந்தவனகையினல் "ஏண்டா சோமு! இந்த டண்டா வழிகளில் எல்லாம் ஏன் பிரவேசிக்கவேண்டும்? உன் தாயார் வீட்டில் முட்டிக்கொள்கிருள்! இவைகளினல் என்ன சாதிக்க முடியும்? நான் சொல்வதைக் கேட்டிருந்தால் இந்த கதி வருமா!" என்று அவனை ஸ்வாதீனமாகக் கேட்டார்.

சோமு :—உன்னைப்போல போலீஸ் வேலை எனக்குக் கிடைத்திருந்தால் எனக்கும் உன் புத்தியைப் போலவே பிரகாசித்திருக்கும். எனக்கு அது இல்லையே. என்ன செய்வதப்பா! நாணு! உனக்கும் எனக்கும் வாக்குவாதம் என்றைக்கும் விடாது. அது

சோம்பேறிகளை—திருட்டுப்புத்தி யுள்ளவர்களை—நயவஞ்சகர்களை—அகப்பட்டதைச் சுருட்டும் அற்பர்களை — உதவியாளர்களை — இதுபோன்ற அனேக குணமுடையவர்களை இன்னர், இன்னர் என்று தெரிவிப்ப

சின்னாட்களாக இல்லாதது நாக்கில் தினவெடுத்தது. இன்று வந்து விட்டாய்! எங்கே இப்படிக் கிளம்பினுய்! இங்கு கூட லாத்தி சார்ஜு செய்வதற்கு வந்து விட்டாயா!......ஓகோ! என்னடா கையில் தடியைக் காணவில்லையே?

நாரா :—போடா போக்கிரிப் பயலே! நம் வீட்டில் இந்த விளையாட்டெல்லாம் பலிக்குமேயன்றி வந்த விடத்தில் வேண்டாம். என் கையில் தடி இல்லாததை நீ கண்டுவிட்டாயோ! இதோ பார் துப்பாக்கி. அது அடிப்பதை விட மேலானது. துஷ்டர்கள் யாராக விருப்பின் எமக்கென்ன? தக்க சிக்ஷை செய்வது எங்கள் கடமை.

சோமு :—ஆமாமப்பா! கடமை என்பது எல்லோருக்கும் உள்ளதுதான். சரி; அந்த விஷயங் கிடக்கட்டும். இவர்கள் யார்? என்று திலகவதியையும், சங்கரியையும் காட்டிக் கேட்டான்.

நாராய :—இவள் என் சகோதரி சங்கரிபாய்; இவளுடைய பாடசாலையில் படிக்கும் மாணவி அந்த அம்மாள். நேரமாகிவிட்டது. போய் வருகிறேம்.—என்று கூறிப் புறப்பட்டான்.

இவர்கள் சம்பாஷணையில் எல்லோரும் கவனம் செலுத்தியிருக்கையில் சுகுமாரன் திலகவதியைக் கண்ணாரக் கண்டு கண்ணலேயே பேசிவிட்டான். பிறகு அவர்கள் எல்லோரிடத்திலும் விடை பெற்றுக்கொண்டு அவ்விடம் விட்டுப் புறப்பட்டார்கள். திலகவதிக்கு அங்கு இருந்த வரையில் மனம் ஒருவாறு இருந்துவிட்டது. வெளிக் கிளம்பியதும் அங்கச்சியம்மாளின் அற்புத வடிவம் கண் முன்பு பிரகாசிக்கலாயிற்று. வீதியில் செல்கையில் வழியில் கண்டு என்ன பேசுவாளோ! தன் உபாத்தியாயினி முன்பு தனக்கு என்ன அவமானம் நேருமோ! என்ற பயம் ஒரு புறம் வந்து சுற்றிக்கொண்டது. அந்தோ! ஜெயிலின் சூல் எதுவும் தெரியாமையினுல் தான் ஜெயிலுக்குள் சென்றுவிட்டால் சுகுமாரனைக் கண்டு சந்தோஷமாக விசாரிக்கலாம் பேசலாம் என்று எண்ணியதற்கு மாருக ஒரு

தற்கு அவர்களது இரு விழிகளின் பார்வையும், நெற்றியின் அமைப்புமே போதுமானவை. மோட்டாருக்கு இரு விளக்குகள் அடையாளம் காட்டுவதுபோல இரு கண்களே குறி காட்டி விடுகின்றன.

காவல் கூடவே வந்துவிட்டதால் அவனுடன் ஏதும் பேசுவதற்கில்லாமல் போய்விட்டதே என்கிற விசனம் மற்றொரு புறம். இரண்டிற்கும் மத்தியில் அவனைப் பார்க்கவேனும் பாக்யம் கிடைத்ததே என்கிற சந்தோஷம். இத்தனை விதமான உணர்ச்சிகளால் உலப்பப்பட்ட வண்ணம் அவர்களோடு வெளியில் வந்தாள்.

அங்கச்சியம்மாள் முதலியோர் தாங்கள் நாடி வந்த மனிதரைக் கண்டு பேசிக்கொண்டிருந்தார்கள். அது ஓர் தனித்த பிரத்தியேக இடமாகையினால் இவர்களைப் பார்க்க முடியாதவாறு நேர்ந்துவிட்டது. திலகவதி முதலியோர் வீதியில் வந்து தம் வண்டியில் ஏறிப் பாடசாலைக்குச் சென்றுவிட்டார்கள். திலகவதி அன்று வீட்டிற்குச் சென்றதும் என்ன நடக்குமோ என்ற பயத்துடன் பாடசாலையில் அமர்ந்தாள்.

தான் வீட்டிற்குச் சென்றால் என்ன விதமான காரணம் கூறித் தப்பித்துக்கொள்வது என்ற விஷயத்தைப்பற்றி யோசனை செய்தவாறு உட்கார்ந்திருந்தாள். பிறகு சடக்கென்று ஒரு யோசனை தோன்றியது. தனது நோட்டு புஸ்தகத்தை எடுத்து, வெகு சுருசுருப்புடன் ஆழமாக யோசனை செய்துப் பின் ஏதோ எழுதினாள். இதற்குள் மணியும் அடித்துவிட்டது. பாடசாலையில் அன்று யாரோ ஒரு சீமாட்டி விஜயம் செய்யப்போவதாய் அன்று காலையிலேயே செய்தி எட்டியதால் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்கள். அந்த அம்மாளைக் களிப்பிக்கும் பொருட்டுச் சில பெண்கள் கோலாட்டம் போடவும், கொப்பி தட்டவும், டான்ஸ் செய்யவும், வாத்யங்களில் சங்கீதம் பாடவும், தனித்த வாய்ப்பாட்டு பாடவும் ஆக பலவிதமான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள். ஆகையினால் திலகவதியை வாய்ப்பாட்டு பாடுவதற்கு வாத்தியாரம்மாள் நிறுத்திக்கொண்டாள். உபாத்தியாயினியின் வார்த்தையைத் தட்டமாட்டாது அவள் நின்றுவிட்டாள்.

ஒரே சம்பவங்களோ, விஷயங்களோ உலகத்தில் பல பேரிடம் காணலாம்; பலரின் அனுபவமாயும் இருக்கலாம். அவற்றைப் பற்றி வெளிவருங்கால் ஒவ்வொருவரும் தன்னைக் குறித்துதான் என்று நினைப்பது சகஜமாய்விட்டது. இதற்குப் பதில் கூறி தர்க்கிக்காமல் விடுவதே நன்மை.

சரியாக மணி 4-30 க்குச் சீமாட்டி வந்தாள். பள்ளிக்கூடத்து மாணவிகளுக்கெல்லாம் மிட்டாய், பழங்கள் முதலியன வழங்கினாள். மேற்குறித்த சங்கீதம், கோலாட்டம் முதலியனவற்றைப் பார்த்தும், கேட்டும் ஆநந்தமடைந்து அந்த பாடசாலைக்கு ஆயிரம் ரூபாய் நன்கொடை கொடுத்துப் பின்னர் தன் வீட்டிற்குச் சென்றாள். இதற்குள் மணி 7-30 அடித்துவிட்டது.

பொழுது ஏற ஏற திலகவதிக்கு அதிக நடுக்கமுண்டாகிவிட்டது. அவளுடைய பயத்தின் அளவு எல்லையிடத் திறமற்றது. அப்படி பயந்தவாறு, தனக்கு அன்று பல விதத்திலும் கிடைக்கவிருக்கும் மரியாதைகளைப் பெற்றுக்கொள்ளத் துணிபுடனேயே வீட்டிற்குச் சென்றாள். 'எப்போது திலகவதி வருவாள்—வருவாள்.?' என்று எதிர்பார்த்திருந்த அங்கச்சியம்மாள் திலகவதி இன்னும் வாராமையினால் அடங்காத கோபம் கொண்டு காத்திருந்த சமயம் திலகவதி வீதியில் படியில் ஏறுவதைப்பார்த்தாள். உடனே வாயில் வந்தவாறெல்லாம் திட்டித் தாண்டவமாடி "அடீ! திருட்டுக் கழுதை! உன்னுடைய புரட்டும் திருட்டும் எத்தனை நாளைக்குத்தான் மறைக்க முடியும் என்று எண்ணினாய். பல நாளைய திருடன் ஒரு நாளில் அகப்படுவான் என்கிற பழமொழி பொய்யாகுமா! நீ எத்தனை நாட்களாக 'பாடசாலைக்குப் போகிறேன்' என்று கூறி இவ்விதம் துர்ச் சகவாஸத்துடன் ஊர் சுற்றுகிறாய்! உன்னை நம்பி என் குழந்தைகள் எல்லாம் பட்டினி கிடக்கின்றன. என் குழந்தைகளைக் கொல்வதற்காகப் பாவி நீ அவதாரம் செய்து இங்கு வந்தாய்! என் வயிறு எரிகிறதே!" என்று லபோ திபோ என்று அடித்துக்கொண்டு திட்டினாள்.

மகா சாந்தவதியாகிய திலகவதி எதற்கும் வாயையே திறக்காமலும், அங்கு நிற்காமலும், உள்ளே சென்றுவிட்டாள். அங்கச்சியம்மாளுக்கு இதனால் ஒரு புறம் ஆத்திரம் அதிகமாக உண்டாகிவிட்டதால் பின்னும் தாறுமாறாக உளறிக்கொண்டு சென்று அடுத்த

சில பக்ஷணங்கள் சிலர் செய்தால்தான் நன்கு அமைகின்றன. போளி செய்வதற்கு......அவர்களே ஏற்றவர்கள். எத்தனைதான் சிரமப்பட்டு செய்யப் புகுந்தாலும் அவர்களைப் போல வருவதில்லை.

வீட்டுக்காரியுடன் திலகவதியைப்பற்றித் திட்டிக்கொண்டே பேசவாரம்பித்தாள். திலகவதி ஒரு நொடியில் சின்ன சமையலைச் செய்து முதலில் குழந்தைகளுக்குப் போட்டு அவைகளைத் தூங்கச்செய்த பிறகு மற்றவர்களுக்குச் சமைத்துக்கொண்டிருந்தாள்......செய்து முடித்தாள்.

சில பணக்காரர்களின் வீட்டில் பல விதமான புதிய தோரணைகள் நடத்துவதுண்டு. வேலைக்காரர்களை அதிகாரம் செய்து அவர்களைக் கண்டபடி திட்டியும், அவர்களின் கூலியைக் குறைத்தும் அவர்களின் வயிற்றில் மண்ணைப் போட்டும் அவர்கள் கரத்தினலேயே செய்யும் பலகாரங்களை வாங்கி வைத்துப் பூட்டி விடுவதும் 'உம். ஆயிற்று! உம் ஆயிற்று!' என்று சதா மிரட்டிக்கொண்டே இருப்பதும், அவர்கள் எத்தனை வேலை செய்தபோதிலும் அதற்காகச் சற்றும் நன்றி காட்டாமல் பின்னும் பல வேலைகளில் குற்றங் காட்டிக் கடுகடுத்துத் திட்டித் தாண்டவம் செய்வதுமான ஆர்ப்பாட்டங்களைச் செய்தால்தான் தங்களின் பணக்காரத் தன்மைக்கு மதிப்பும் கௌரவமும் உண்டு என்று எண்ணுகிறார்கள். எண்ணிச் செய்கிறார்கள்.

தம்மை யண்டிப் பிழைக்கும் ஏழைகளாயிற்றே, அவர்களைக் கடிந்துகொள்வது நியாயமா என்கிற கருணையான எண்ணத்தை அவர்கள் அடியோடு மறந்துவிடுகிறார்கள். வேலைக்காரர்களை அதிகாரம் செய்யாமல் புசித்தால் அன்றைய சாப்பாடு உடலில் ஒட்டுவதில்லை என்பது அவர்களுடைய தீர்மானம். அந்த கோஷ்டியில் முதன்மை ஸ்தானம் வகித்தவளே நமது அங்கச்சியம்மாள். தனனுடைய அதிகாரத்தின் மகிமையினால் அந்த அம்மாள் தினம் ஓர் புதிய வேலையாளையே பெற்று வருவது வழக்கம்.

அத்தகைய மகாராஜி அடுத்த வீட்டிலிருந்து எழுந்து வந்ததும் தன் குழந்தைகளெல்லாம் பட்டினியாகவே தூங்கிவிட்டதாக

இஞ்செக்ஷனே செய்துகொள்ளாதவர்கள் அவ் ஊசியைக் கண்டால் பயப்படுகிறார்கள். சதா அந்த பரிக்ஷையில் தேறியவர்களோ அவ் ஊசியைக் கண்டால் துணி தைக்கும், பூ போடும் ஊசியைப்போல நினைக்கிறார்கள்.

எண்ணி "ஐயோ என் வயிறு எரிகிறதே! படு பாவி! உன்னால் என் குழந்தைகள் பட்டினியாகத் தூங்கிவிட்டனவே, அவர்கள் பட்டினி கிடந்தால் உனக்கு என்னடீ சந்தோஷம்?" என்று கண்மூடித் தனமாக ஆட்டமாடத் தொடங்கித் தூங்கும் குழந்தைகளை எல்லாம் எழுப்பி இழுத்துக்கொண்டு "என் செல்வங்களே! கோடி ஐச்வர்யத்தில் பிறந்தும் பாபிஷ்டியினால் பட்டினியாகத் தூங்குகின்றீர்களே!" என்று தன் போக்காகக் கூறிக்கொண்டும், திலகவதியைத் திட்டிக்கொண்டும் வருகிறாள்.

வயிறு நிரம்ப உண்டு உறங்கும் குழந்தைகள் தூக்கத்தில் சாமியாடுவதுபோல ஆடி விழுந்தவாறு ஒன்று அழுகின்றது, ஒன்று மண்டியிட்டுக்கொண்டு வழியில் படுத்துக்கொள்கின்றது; ஒன்று இடுப்பிலேயே தூங்குகின்றது. ஒன்று அரைத்தூக்கவெறி பிடித்துக் கத்துகின்றது. இத்தனை வைபோகமாய் எல்லாவற்றையும் தூக்கிக்கொண்டு வருவதைக் கண்ட திலகவதிக்கு அந்த ஆத்திரக்காரியின் மதியைக் கண்டு கோபம் ஒரு புறம் பாதிக்கின்றது. நகைப்பு ஒரு புறம் வருகின்றது. இரண்டையும் வெளியில் காட்டிக் கொள்ளாமல் வணக்கமாகப் பேசத் தொடங்கி "மாமி! குழந்தைகளுக்குச் சாதம் போட்டாயிற்று. சாப்பிட்ட பிறகே அவர்கள் நித்திரை செய்தார்கள்." என்று எத்தனை கூறியும் அதை காதில் வாங்காமல் "குழந்தைகளைப் பட்டினி போட்டது மன்னியில் அதை மறைக்கச் சாப்பிட்டாயிற்று என்று உளறுகின்றாயா! என் குழந்தைகள் பட்டினியாகத் தூங்கப்போகிறார்களே என்கிற அக்கரை உனக்கு அடித்துக்கொள்கிறதோ! என்று திட்டியவாறு உள்ளே இருக்கும் சாதத்தைக் கலந்து சாமியாடும் குழந்தைகளுக்குப் போட்டாள்.

அவைகள் ஒன்றேனும் தின்னாமல் தூ தூ என்று துப்பிவிட்டன. அந்த ஆத்திரத்தில் சோற்றை வாரி இரைத்துவிட்டுக்

பொறாமைக் கண்களால் ஒருவரை கடாட்சித்துப் பேசிவிட்டாலோ, அவர்கள் அதோடு சரியான நிலைமைக்கு வருவதே அரிது. அக் கண்கள் குளிரும் வண்ணம் ஆய்விடுகின்றது. அவர்களுடைய நலம் கடவுளின் கையிலிருப்பதை மறந்து விடுகிறார்கள்.

குழந்தைகளை நான்கு அறைகள் விட்டுக் கைப்பற்றி இழுத்துத் தள்ளினள். ஏக காலத்தில் பாண்டு வாத்ய கோஷம்போல எல்லாம் கர்ஜனை செய்ய வாரம்பித்துவிட்டன.

இந்த அதிகார தேவதை வீட்டிலிருப்போருக்கே போதும் போதாமல் வயிறளந்த நாழியைப்போல அரிசியைக் கொடுத்துச் சோறு வடிக்கச் செய்வதுதான் ஓர் பெரிய பணக்கார மகிமை என்று செய்வது வழக்கம். திலகவதி அவள் கொடுத்த சாமான்களுக்கு மேல் ஒரு மணியரிசியும் வடிக்க முடியாது. அன்று ஏற்கெனவே குழந்தைகள் சாப்பிட்டாய்விட்ட பிறகு உள்ள சாதத்தைக் கலந்து சின்ன பின்னமாய் வாரி இறைத்துவிட்டதால் உள்ளே சாதம் குறைந்து விட்டது கண்டு மூடத்தனத்தோடு மீண்டும் திட்டியவாறு "சமையல் சீக்கிரம் ஆகவேண்டும்'' என்று அரிசியைக் கீழே கொட்டி விட்டுச் சோற்றைக் கொஞ்சமாக வடித்து வைத்தாயே! உன் மண்டைத் திமிரால் நாங்கள் பட்டினி சாகவேண்டுமோ!'' என்று ஆடியவாறு தானே தடார் புடார் என்று அடுப்பை மூட்டலானுள்.

அந்த புண்யவதி என்றும் அடுப்பை மூட்டியறியாத செல்வச் சீமாட்டியாகையினல் கட்டையை முன்பு வைத்து மூட்டுவதா, முட்டையை முன்பு வைப்பதா என்றுகூடத் தெரியாமல் திகைத்தபடி பாட்டலுடன் கெரிஸினுயிலைக் கொட்டி வத்தியை வைத்தாள். அது குபீரென்று பத்திக்கொண்டு ஆகாயத்தை அளாவி எறிய வாரம்பித்ததைக் கண்டு பயந்து நடுநடுங்கி உடனே ஒரு குடந் தண்ணீரைத் தூக்கி அடுப்பில் கொட்டினுள். சூடு ஆறுமலிருக்கும் பொருட்டு அடுப்பின்மீது வைத்திருந்த ரசம், குழம்பு, வறுவல் எல்லாவற்றிலும் தண்ணீர் கொட்டி, அவை தண்ணீர் கொட்டிய வேகத்தில் உருண்டுவிட்டன.

ஐயோ! இந்த எதிர்பாராத செய்கையின் ஆவேசத்தில் திலகவதி கையில் புத்தகம் வைத்துக்கொண்டு படித்திருந்ததை

சில தடபுடல் பேர்வழிகளின் வீட்டில் திடீரென்று சென்று பார்த்தால் தலையல் சாதம் செய்வதும் அபுரூபமாக விருக்கிறது. ஆசாமியின் ஆடம்பரமோ, ஆயிரம் ரூபாய் சம்பளக்காரனே என்று ஐயமுறச் செய்கின்றது.

நோக்கி அதை வெடுக்கென்று பிடுங்கிக் கிழித்து எறிந்து "திமிர் பிடித்த தடிச் சிறுக்கி! போ வெளியில். உலக்கையைப் போல நின்று வேடிக்கை பார்க்கிருயா?" என்று கூறி அவளைக் கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ளினுள். அப்போதும் திலகவதி வெகு வணக்கத்தோடு "மாமி! நான் செய்கிறேன்" என்று கூறியும், கோபத்தினுல் அதை மதியாது உள்ளே சென்றுவிட்டாள். பின்னர் எப்படியோ தட்டித் திணறி அடுப்பைப் பற்ற விட்டுச் சோற்றை வடித்துத் தானே சமையல் செய்துவிடவேண்டுமென்று நினைத்தாள். சோறு வடித்தறியாத சுகுமாரியானதால் அதைப் பதம் பார்க்கவறியாமல் ஜெயிற் களிபோலச் செய்துவிட்டாள்.

தனது காரியம் சரியில்லை என்பதைத் தானே யறிந்தும், மமதையினுல் தான் செய்ய எத்தனித்த சோறும் களிமொத்தை யாகிவிட்டதே! என்ன செய்வது? மேற்கொண்டு குழம்பு, ரசம் எவ்விதம் வைப்பது, என்று திகைத்துக்கொண்டே நிற்கையில், வீட்டு எஜமானர் தன்னுடன் இரண்டு விருந்தாளிகளை யழைத்துக்கொண்டு வந்து மூவருக்கும் இலை போடும்படி உத்திரவிட்டனுப்பினர். இது கேட்ட ஆத்திரக்கார எஜமானி திடுக்கிட்டாள். "விருந்தாளிகளுக்கு இக் களி மொத்தையை எங்ஙனம் போடுவது? இந்த தரும சங்கடத்திற்கு என்ன செய்வது?" என்று யோசித்தாள்.

ஓட்டலிலிருந்து தருவிப்பதா என்று எண்ணினுள். காசுப் பிசாசு குறுக்கே வந்து ஆசையைக் கிளறிவிட்டது. ஆதலால் சற்று யோசித்தாள். "விருந்தாளிகளை உபசரித்தனுப்பாவிடின் எஜமானருக்கு மிக்க கோபம் வந்து விடும். அதோடு மானம் போய்விடும். ஆதலால் திலகவதியிடம் சொல்லித்தான் காரியம் ஆக வேண்டும்" என்று நிச்சயித்துக் கொண்டாள். எப்படிச் சொல்வதென்று வெட்கப்பட்டாள். அவசரமாகையினுல் திலகவதியினிடமே வந்து அதிகார தோரணையுடன், சீக்கிரம் சமையல் செய்யும்படிக் கூறினுள். [இங்கு மேற்படி விஷயத்தைக் குறித்தது சில பணக்காரர்களின்

வழக்கமாகச் செய்யும் வேலையாயிருப்பினும் சில சமயத்தில் மறதி ஏற்பட்டுவிட அதனுல் பிறகு கஷ்டம் நேர, அலைய வேண்டி வந்துவிடுகிறது. ஜாக்ரதை. ஜாக்ரதை என்று மனத்தில் நினைப்பதே மிஞ்சுகின்றது.

அதிகார தோரணையில் இதுவும் ஒன்று என்பதை விளக்கும் பொருட்டே யாகும். இதுபோன்று ஆங்காங்கு இன்னும் அனேக அசட்டு—மூட—அதிகாரங்களைக் காணலாம்].

திலகவதி தன் வேலையை முடித்து விருந்தாளிகளுக்கு உபசரித்தாள். அன்றைய கண்டத்தினின்றும் தப்பிப் பிழைத்தாள். அவளுடைய முக்கியமான புத்தகத்தை இந்த அகங்காரப் பேய் கிழித்தெறிந்து விட்டதனால் அதை எல்லாம் பொறுக்கி யொன்று சேர்த்து இரவு முற்றும் கண் விழித்து, கோந்து தடவி ஒட்டி மறு தினத்திற்குத் தனக்குப் படிக்க உபயோகமாகும்படிக்குச் செய்து கொண்டிருந்தாள்.

இதைக் கண்ட அங்கச்சியம்மாள் சீற்றங்கொண்ட நாகம் போலச் சீறி விழுந்து "தடிக் கழுதை! இரவு முற்றும் விளக்கு எரிய விடுவதற்கு உன் அப்பன் சொத்து குபேரப் பட்டணத்தை மிஞ்சிக் கிடக்கின்றதென்று எண்ணினையா! உனக்குத் தலை கால் ஒன்றும் தெரியவில்லையா? இரவு முற்றும் விளக்கெரிக்க யாரடி உத்திர விட்டது? என் வீட்டில் பாட்டியும், பேத்தியும் உண்டு உருட்டுவது போதாதென்று விளக்கெரித்து வேடிக்கை பார்க்க யாரடி சொல்லியது?" என்று திட்டியவண்ணம் விளக்கைச் சடக்கென்று அவித்துவிட்டுப் போய் விட்டாள்.

திலகவதியை சிறைச்சாலையில் பார்த்ததுபற்றி கணபதிக்கு அசாத்யமான கோபம் பொங்கிக் கொண்டிருந்தது. அவர் வீட்டிற்குச் சென்றதும் திலகவதியைக் கண்டிக்க வேண்டும் என்று எண்ணி இருந்தார். தன்னோடு கூட விருந்தாளிகள் வந்துவிட்டபடியால் அவர்களின் முன்னிலையில் தான் எதுவும் செய்யலாகாது என்று மரியாதையாக இருந்து விட்டார். விருந்தாளிகள் இரவு அவ்விடமே தங்கி விட்டதால் அதற்குமேலும் அன்று விசாரிக்க முடிய

'நம்மை விட வயதில் பெரியவர்கள்தானே. நாம் சற்று அடங்கி நடப்போம்' என்ற உத்தம குணமுடையவர்கள் எங்கோ ஒருவர்தான். 'நாம் ஏன் தாழவேண்டும் அவர்களுக்கும் நம்மைப்போலத்தான் அவயவங்கள்

வில்லை. அவருக்குப் பதிலாக அங்கச்சியம்மாள் போதுமான வரை யில் பகுமானம் செய்வதை இன்னமும் நிறுத்தவில்லை.

திலகவதி தன் விதியை எண்ணி இரவைக் கழித்தாள். அன்று சுகுமாரனைக் கண்ட ஓர் ஆறுதல் தன் மனத்தில் பளிச் பளிச்சென்று பிரகாசித்துக் கொண்டிருந்ததால் அவள் அதையே எண்ணித் தன் துயரத்தை மறந்திருந்தாள். விடியற்காலம் காப்பி தயாராகியதும் கணபதிக்குத்தான் முதலில் கொடுப்பது வழக்கம். ஏனெனில் அவர் ஒருவரே விடிந்தவுடன் எழுந்திருப்பவர். அங்கச்சியம்மாளோ தினம் தன்னை எழுப்பும் பொருட்டுத் தான் கடவுள் ஆதித்தனை திட்டஞ் செய்துப் பிறப்பித்திருக்கிறார் என்ற துணிபுடன் சூர்ய ரஸ்மி தன்மீது படாது எழுந்திருப்பதில்லை. அவளது குழந்தைகளும் அவ்வளவேதான். ஆதலால் கணபதி முதலில் எழுந்தார். அப்போது அவளை நன்றாகத் திட்ட வேண்டுமென்றே எண்ணி உள்ளே வந்தார்.

திலகவதி காப்பி, பலகாரத்தை மரியாதையாக அவருக்குக் கொடுத்து விட்டு, "மாமா! தாங்கள் எனக்கு ஒரு உபகாரம் செய்ய வேண்டும். அதாவது எங்கள் பள்ளிக்கூடத்தில் சிறைச்சாலையைப் பற்றி ஒரு வியாஸம் எழுதவேண்டுமென்று கூறி என்னுடைய பாடசாலை உபாத்தியாயினியே என்னை நேற்று சிறைச்சாலைக்குள் செல்ல அனுமதி பெற்று அழைத்துச் சென்றாள். சிறைச்சாலை முற்றிலும் பார்த்தேன். அதைப்பற்றி ஏதோ எனக்குத் தெரிந்த வரையில் எழுதி இருக்கிறேன். தயவு செய்து அது சரியா என்று பரிசோதித்துக் கொடுக்க வேண்டும்" என்று வெகு வணக்கமாயும், மரியாதையாயும், தாழ்ந்த குரலில் கூறினாள்.

அங்கச்சியம்மாளைத் தவிர மற்ற எல்லோருக்கும் திலகவதியின் வார்த்தையும், குணமும், முகத்தோற்றமும் ஒன்றுகூடி மன இரக்கத்தை உண்டாக்கிவிடும். கணபதிக்கு ஏற்கெனவே திலகவதியி

இருக்கின்றன. அவர்கள்தான் தாழட்டுமே!' எனும் அகம்பாவிகள்தான் அதிகம். அவர்கள் கடைசியில் அடையும் பலன் என்ன? போகப் போகத் தானே தெரிய வரும்.

னிடத்தில் சற்று இரக்கம் உண்டாகையினால் இதைக் கேட்டதும் வியப்புற்றார். தான் அவள் விஷயத்தில் வித்யாசமாக எண்ணிக் கண்டிக்க வேண்டும் என்று கோபத்துடன் வந்ததற்கு மாறாகத் திலகவதி கூறியது அவருக்கு நியாயமாகத் தோன்றியது. இவ்விதமான கேள்விகளைப் பாடசாலையில் கொடுப்பது சகஜம். "கண்காட்சிகளுக்கு அழைத்துச் செல்வதும் சகஜம். ஆகையினால் நாம் வீணாக தப்பிதமான எண்ணங் கொண்டு விட்டோமே?" என்று தனக்குள் வருந்தினார். திலகவதி அனேக தரங்களில் தன் பாடங்களையோ, அன்றி தான் எழுதிய வியாஸங்களையோ கணபதியினிடத்தில் காட்டித் திருத்திக் கொள்வது வழக்கமாகையினால் இதையும் அப்படியே எண்ணியதோடு தான் முன்னர் நினைத்தபடி கோபிக்காது விட்டு விட்டார். தன் மனைவி ஆட்டம் ஆடி இருப்பாள் என்றது அவருக்குத் தெரியுமாதலால் உண்மையை அவளிடம் கூற எண்ணினார்.

பிறகு திலகவதி முதல் நாள் மாலை பாடசாலையிலேயே யோசித்துத் தயார் செய்து கொண்டு வந்த வியாசத்தை அவரிடம் கொடுத்தாள். கணபதி அதை வாங்கிப் படித்துப் பார்த்தார். திலகவதி சிறைச்சாலையைப் பற்றி எழுதியிருந்த வியாசம் உண்மையிலேயே வெகு பொருத்தமாயும், அழகாயும் அமைந்திருந்தது கண்டு கணபதிக்கு எல்லையில்லா வியப்புண்டாகியது. "திலகவதி ஓர் ஆண் மகவாகப் பிறந்திருந்தால் எத்தனை நன்றாக விருக்கும். என்ன சாமர்த்தியம்! என்ன புத்திசாலித்தனம்!" என்று தனக்குள் வியந்து பின்னர், "திலகம்! இது வெகு நன்றாக இருக்கிறது. விஷயத்தினால் சில வியாசங்களுக்கு ருசி யுண்டாகும். எழுதும் சாமர்த்தியமான நடை யழகினால் சில வியாஸங்களுக்கு மகிமையும் இனிப்பும் உண்டாகும். இந்த வியாஸத்தில் இரண்டும் ஒன்றோடொன்று ஒட்டி உறவாடுகின்றன. இது வெகு திறமையாயிருக்கிறது." என்று சிலாகித்துக் கூறிவிட்டுப் போய்விட்டார்.

மனைவிக்குப் பயந்தமண்ணாங்கட்டிப் புருடர்கள் சிலர் தமக்கு எதுவிருந்தாலும் இல்லாவிடினும் பாதகமில்லை. 'மனைவிக்கு நகைகள், உடைகள், ஸ்னோ, அத்தர், வாசனை சோப்புக்கள் முதலியன எவையும் குறையாம

திலகவதி "அப்பாடா! இந்த கண்டத்திற்குத் தப்பிவிட்டோம். இனி பாதகமில்லை" என்று பெரிய மூச்சு விட்டாள். அங்கச்சியம்மாளின் திட்டும் வசையும் எப்போதும் கூடவே பிறந்ததாதலால் அதுபற்றி அவ்வளவு பயப்படவில்லை. கணபதியின் கோபத்திற்குத்தான் சற்று பயந்தாள். அதில் ஜெயித்து விட்டதால் திலகவதி சந்தோஷமே அடைந்தாள். பிறகு தன் வேலைகளைச் சரிவரச் செய்து கொண்டு பாடசாலையின் பாடங்களையும் குறையாது படித்துக் கொண்டு வந்தாள். இதனிடையில் பாடசாலையில் தினம் பத்திரிகைகளைப் பார்க்காமலிருப்பதில்லை. "சுகுமாரனின் கேஸ் விஷயமாக என்ன வாயிற்றோ!" என்கிற எண்ணம் பெரிதாகத் தோன்றியதால் அதையும் விடாது கவனித்துக் கொண்டே வந்தாள். பின்னும் சில தினங்களாயின.

ஒரு தினம் வழக்கம் போல பத்திரிகையைப் படித்தாள். அதில் "சுகுமாரன் முதலியோர் புரட்சி இயக்கத்தில் சம்மந்தப்பட்டவர்களுடைய தூரத்து சிநேகிதர்களேயன்றி அவர்கள் நேராக எதுவும் செய்ய வில்லை. அவர்களும் இவர்களும் சாதாரணமாகத் தெரிந்தவர்களாகையினால் சம்மந்தப்பட்டிருக்கலாகுமோ என்ற சந்தேகத்தினால் கைதியாக்கி விசாரித்ததில் அவர்கள் சம்மந்தப்படவில்லை என்று தக்க சாட்சிகளோடு ருஜுவாகி விட்டதால் அவர்களை விடுதலை செய்யப்பட்டது." என்று சரியான ஆதாரங்களுடன் எழுதி இருந்தது கண்டு திலகவதிக்குண்டான சந்தோஷத்திற்கு எல்லையே இல்லை. மனத்திற்குள் பொங்கும் ஆநந்தத்தை யடக்க முடியாமல் அவ்விடம் விட்டு எழுந்து தோட்டத்திற்குச் சென்று தன்னை யாரும் கவனிக்காதபடி உலாவலானாள். புரட்சி இயக்கத்தில் சம்மந்தப்பட்டவர்களில் சிலருக்கு தீபாந்திர சிக்ஷையும், சிலருக்கு அனேக வருடம் கடுங்காவல் சிக்ஷையும், உயிருக்கே மோசமான சிக்ஷையும் விதிப்பதென்று கேள்விப்பட்டிருக்கும் திலகவதிக்கு இம்மூன்றில் எது வருமோ என்று நடுக்கலுண்டாகி வேதனை செய்து

விருந்தால் போதும்' என்று செய்கிறார்கள். அதில் குறைந்து விட்டால் சோறு அகப்படாதென்கிற பயமோ! அன்றி, கல்த்தாப்ளிகேஷன் வருமோ என்கிற திகிலோ தெரியவில்லை.

கொண்டே இருந்தது. இப்பத்திரிகையிலுள்ள விஷயத்தைப் படித்ததும் பேரானந்த முண்டாகிவிட்டது.' அவர் எந்த இடத்தில் இருக்கிறாரோ! என்ன செய்கிறாரோ!' என்கிற யோசனை யுண்டாகிவிட்டது. தான் அவரைச் சந்திக்க முடியாவிடினும் அவருக்கு ஆபத்து ஒன்றுமில்லாதிருப்பின் அதுவே போதும் என்று எண்ணிச் சந்தோஷித்தாள்.

சிறைச்சாலையிலிருந்த சுகுமாரனுக்கு, திடீரென்று மின்னல் தோன்றி மறைவதுபோலத் திலகவதி வந்து காட்சி கொடுத்துச் சென்றதானது அவன் மனத்தில் ஏற்கெனவே விதை யூன்றி முளை கிளம்பிச் சிறிய துளிர் விட்டுச் செழிக்க வாரம்பித்த காதல் செடிக்குத் தண்ணீர் விட்டது போலாய் விட்டது. திலகவதியின் கரை காணாத அன்பின் நிலையை அவன் அன்றே அறிந்தான். அவளைக் கண்டது முதல் அபாரமான உணர்ச்சியினால் தாக்கப்பட்டு அதே நினைவுடன் தான் என்று மீண்டும் அவளைக் கண்டு பேச நேரும் என்ற யோசனையோடு இருந்தான். பிறகு அவனுடைய கேஸ் விசாரணையாகி அவன் குற்றவாளி யல்லவென்று விடுதலை செய்து விட்டார்கள்.

இந்த தீர்ப்பு கிடைக்கும் என்று சுகுமாரன் எதிர்பார்த்திருந்தான்; ஆகையினால் அவன் அதன் பொருட்டு ஆச்சரியப்படவில்லை. விடுதலை யடைந்ததும் நேரே தான் இருந்த வீட்டிற்குச் சென்றான். அவ் வீட்டுக்காரர் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர். சுகுமாரனை புரட்சி இயக்கத்தின் சம்பந்தமாகக் கைது செய்த உடனே அந்த உத்யோகஸ்தருக்குப் பெரும் பயமும், துடை நடுக்கலும் எடுத்துக் கொண்டது. தன் வீட்டில் அத்தகையோனைக் குடி வைத்திருந்ததினால் தனக்கு என்ன ஆபத்து வந்து விடுமோ என்று தடபுடலாக நடுங்கி, தனக்கு ஒன்றும் நேராதிருக்க வேண்டுமே என்று பயந்து போலீஸாரிடம் கூறி, அவர்களின் உதவியைக் கொண்டு சுகுமாரனின் சாமான்களை போலீஸ் ஸ்டேஷனிலேயே தூக்கி வைத்து விடுதியைக் காலி செய்து விட்டார்.

சில கலகக் கொள்ளிகள் பரிசுத்தமான களங்கமற்ற மனத்தையுடைய மனிதர்களுக்குச் சரியானபடி போதித்து மனத்தை நன்றாக மாற்றிக் கலைத்து விடுவதும், பிறகு அந்தக் கலகக்காரர்களை வெவ்வேறு

இந்த தகவல் சுகுமாரனுக்குத் தெரியாதாகையால் நேரே வீட்டிற்குள் வந்தான். அவனைப் பார்த்த வீட்டுக்காரர் "அப்பா! நீ இனி இவ்வீட்டிற்கு வரவேண்டாம். உன்னுடைய செய்கையினால் எங்களுக்கேதேனும் ஆபத்து வந்துவிடப்போகிறதே என்று மிகவும் பயமாயிருந்ததால் நான் போலீஸாரின் முன்னிலையில் உன் விடுதியைக் காலி செய்து விட்டேன். இனி வேறு விடுதி பார்த்துக் கொள்ளப்பா! உன்னுடைய உத்தமமான சினேகிதத்தைப் பிரிய மனம் வரவில்லை எனினும் உன் செய்கையில் பேராபத்துக்கள் அடங்கி இருக்கின்றன. எனது பிழைப்பில் மண் விழுந்துவிட்டால் நான் என்ன செய்வேன்? இக்காலத்தில் உத்யோகம் கிடைப்பதே குதிரைக் கொம்பாக விருக்கிறது. அதைப் போக்கடித்துக் கொண்டால் எப்படி? நீ மகா புத்திசாலி. உனக்கேனப்பா இந்த துஷ்டச் செய்கைகள்?" என்று கண்டித்துப் பேசினர்.

இது கேட்ட சுகுமாரனுக்கு நகைப்பு வந்துவிட்டது. "மாமா! உங்களுக்குக் கஷ்டம் வரும்படியாக நான் செய்வேன் என்று சொப்பனத்திலும் எண்ணுதீர்கள். என்னால் உங்களுக்கு ஆபத்து நேருமென்று தெரிந்திருந்தால் நான் முன்னரே காலி செய்துவிட்டிருப்பேன். நான் சத்யமாகப் புரட்சி இயக்கத்தை ஆதரிப்பவனேயல்ல. அதைப்பற்றிய விஷயங்களை நான் பத்திரிகையில் படிக்கையில் கூட "இவ்விதம் ஏன் செய்யவேண்டும்? இவ்வித புரட்சிக்காரர்களால் நமது தேசத்திற்குக் கஷ்டந்தான் அதிகமாகின்ற" தென்று நினைப்பது வழக்கம். இதைப்பற்றித் தாங்கள் சந்தேகப்படவே வேண்டாம். புரட்சி இயக்கத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கும் எனக்கும் ஏதோ தொடர்பு இருப்பதாகப் போலீஸார் வெகு சாமர்த்தியமாய்க் கண்டு பிடித்து என்னைக் கைதியாக்கினார்கள். அதனால் சில நாளாவது சிறைச்சாலையின் அனுபவத்தைக் கண்டேன். மாமா! என் சாமான்கள் போலீஸாரிடமா இருக்கின்றன! எனக்குத் தெரியாமல் தாங்கள் அப்படிச் செய்யலாமா?" என்றான்.

பெரிய மனிதர்கள் கண்டு விசாரிக்கையில் கக்க பிக்க என்று ஆந்தை போல விழித்துக்கொண்டு கள்ளச் சமாதானம் கூறுகிறார்கள். ஏன் விதியோ!

அதைக்கேட்ட வீட்டுக்காரர் "நீ இந்த கேள்வியைக் கேட்கப் போகிருயே என்றுதான் நான் போலீஸாரின் உதவியைக்கொண்டு காலி செய்தேன். என் பிழைப்பின் முக்கியம் எனக்குச் சரி. எனக்கு வேலை இருக்கிறது; நான் போய் வருகிறேன்" என்று கூறி விட்டு உள்ளே போய்விட்டார். சுகுமாரனும் வீட்டுக்காரனுடைய பயந்தாங்கொள்ளித் தன்மையை எண்ணி நகைத்தவாறு நேரே போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று சாமான்களைப்பற்றி விசாரித்து அவைகளைச் சரியாகப் பெற்றுக்கொண்டான். திடீரென்று தனக்கு விடுதி எங்கு கிடைக்கும் என்று சற்று யோசித்தான். அவன் சிநேகிதர்களின் வீட்டில் வைத்திருந்து தான் ஒரு வீடு பார்த்துக் கொண்டு பிறகு அதை எடுத்துக் கொள்வதென்று தீர்மானித்து, அங்ஙனமே ஒரு சிநேகிதனுடைய வீட்டில் வைத்தான்.

அன்று அவன் விடுதலையானது பற்றி சந்தோஷம் விசாரிப்ப தற்காக அவனைத் தேடிக்கொண்டு வந்த சிநேகிதர்கள் கணக் கில்லை. எல்லோருக்கும் பதில் பேசி யனுப்பிக்கொண்டே இருந் தான். அன்று வேறு எதையுமே கவனிப்பதற்கு முடியாது போய் விட்டது. அடுத்த நாள் முதல் தனக்கோர் விடுதி தேடவாரம்பித் தான். சரியான இடம் கிடைக்காமல் ஒரு வாரம் அலையும்படியாய் விட்டது. சாப்பாடு மாத்திரம் வழக்கமான ஓட்டலில் சாப்பிட் டுக் கொண்டிருந்தான். சிநேகிதன் சுகுமாரனுக்கு மிகவும் பிரிய மானவன். அவனும் அவ்வாறே நடப்பவன், ஆதலால் ஏதும் பேசா திருந்தான். எனினும் அவனுடைய வீட்டு மனிதர்களுக்கு சுகு மாரன் அங்கு சாமான் வைத்திருப்பது சற்றும் பிடிக்கவில்லை.

அதைப்பற்றித் தமது மகனிடம் கூறியதொன்றும் பலிதமாக வில்லை யாதலால் அவர்கள் சுகுமாரனிடம் நேரிலேயே கூறுவதற் குப் பதிலாக அவன் காதில் படும்படியாக "இதென்ன சனியன்

சிலர் தாங்கள் பேசுவதைக் கேட்பவர்கள் சிரிக்க வேண்டுமென்று தாங்களே முதலில் சிரித்து விடுகிருர்கள். உண்மையான ஹாஸ்யரஸ மிருந்தால் சிரிப்பு வருமா அல்லது ஒருவர் சிரிக்கிருர்களே யென்று மற்ற வர் சிரிக்க முடியுமா வென்பதைக் கவனிப்பதில்லை.

பிடித்த காலமோ! வீட்டிலே கிடக்கும் சாமான்களினுலேயே படுக்க இடமில்லாது திண்டாடுகையில் ஊர்ச் சனியனை எல்லாம் இழுத்துக் காலில் போட்டுக்கொள்கிறது. இந்த முட்டாள் பயலின் வேலையினுல் இம்சைதான். காலை வைக்க இடமில்லாமல் கஷ்டப் படவேண்டி யிருக்கிறது. ஒரு நாளைக்கு ஐயோ பாவமென்று இடங்கொடுத்தால் இங்கேயே இருந்து தன் படிப்பை முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிருப்போலிருக்கிறது. அவனைச் சொல்லிப் பயனென்ன? நம்ம வீட்டுச் சனியன் சரி இல்லை. தினம் காப்பியைக் கொடு; பலகாரம் கொடு என்று பிராணனை வாங்குகிறுன். ஏதடா ஒரு நாள் இரண்டு நாள் மரியாதையாயிருந்தோம்; இனி எங்காவது இடம் பார்த்துக்கொண்டு போவோம் என்கிற எண்ணமே தோன்றவில்லையே! இதென்ன பேமானித் தனமோ! பணக்காரப் பிள்ளைகளுக் கென்ன பஞ்சமா வந்துவிட்டது?'' என்று அந்த சிநேகிதனுடைய தாயார் ஒரு தினம் கூச்ச லிட்டாள்.

இந்த வார்த்தைகளைப் பூராவும் சுகுமாரன் கேட்டுக் கொண்டே உட்கார்ந்திருந்தான். அவன் மனது மிகவும் வருந்தித் தத்தளிக்கின்றது. "சீ! இந்த நிமிடமே நாம் வெளியில் போகா விட்டால் நம்முடன் நேரிலேயே கூறி ஏளனம் செய்யும் காலம் சமீபித்து விடும். மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். என்னுடைய ஆயுள் காலத்தில் இன்றுதான் இத்தகைய இழிவான—வசையான—சொற்களைக் கேட்க நேர்ந்தது. இதுவும் சூட்டுக் கோல்தான். சிநேகிதனின் அன்பை எண்ணி வந்ததற்கு அவன் வீட்டாரின் நிலைமையையும் மனுேபாவத்தையும் நன்கறிந்துகொண்டாயிற்று'' என்று எண்ணி அப்போதே வெளியில் சென்று ஓர் ஓட்டலில் ஒரு அறை காலியிருப்பதை யறிந்து அதற்கு அட்வான்ஸ் கொடுத்துவிட்டு அப்போதே தன்னுடைய சாமான்களைக்

யாராலாவது தங்களுக்குக் காரியமாக வேண்டி யிருந்தால் மாத்திரம் சிலர் அவர்களுக்கு உதவி செய்கிறுர்கள். அம்மாதிரியே தங்களைப் பற்றிப் பிறர் நினைப்பார்களே யென்கிற எண்ணம் அவர்களுக் குண்டாவதில்லை போலும்.

காலி செய்து எடுத்துக்கொண்டு போய்விட்டான். போகும்போது சிநேகிதனுக்கு ஒரு கடிதம் எழுதி மேஜைமேல் வைத்து, உள்ளே சென்று அவர்களிடத்தில் சொல்லிக்கொண்டு போனான்.

தான் ஒரு வாரம் அங்கு சாமான்களை வைத்திருந்ததற்காக அவர்களுக்கு எவ்விதம் பணத்தைக் கொடுப்பதென்று யோசித்தான். அந்த வீட்டின் சொந்தக்காரனிடம் சென்று அவர்களுடைய முழு விடத்திற்கும் கொடுக்கவேண்டிய ஒரு மாதத்திய வாடகைப் பணத்தைத் தானே கட்டி விட்டு அவனிடமிருந்து ரசீதை வாங்கி அதைத் தன் சிநேகிதனுக்கு வைத்த கடிதத்திலேயே சேர்த்து வைத்துவிட்டான். பிறகு தன் விடுதிக்குச் சென்றான்.

வெளியில் சென்றிருந்த சிநேகிதன் வந்ததும் இவ்விஷயத்தை யறிந்தான். மிக்க விசனித்துத் தன் வீட்டு மனிதர்களிடம் சண்டை யிட்டான்; மனஸ்தாபப் பட்டான். சுகுமாரனின் சாந்தமான கடிதத்தைப் படித்து வருந்தினான். அதோடு கூடவிருந்த ரசீது அவன் மனத்தை மிகவும் வாட்டியது. தன் வீட்டுக்காரர்களின் மதி சூனியத்தை எண்ணி வருத்தமுற்று சுகுமாரனிடம் சென்று தனது மனோ நிலைமையைக் கூறி, மன்னிப்பு கேட்டுக் கொண்டான்.

சுகுமாரன் இந்த நிலைமையிலும் திலகவதியை மறத்தல் கூடுமா! எந்த நேரமும் அதே ஏக்கம் அவன் இதயத்தைப் பிளக்கின்றது. தான் எங்கு சென்று தேடுவது என்றதை யறியாது தவித்துக்கொண்டிருந்தான். அதே ஏக்கம் பிடித்து இரவு பகலாக 'எவ்விதம் காண்பது?' என்ற யோசனையுடன் வீதியில் நடக்கும் போதும், வெளியில் சென்றுலாவும் போதும் "எந்த வீதியிலாவது காண நேருமா! எந்த வீட்டு வாசலிலாவது நிற்பாளா!" என்று பார்த்துக்கொண்டே செல்வான். மனம் அதிலேயே லயித்து அலைந்து திரிவான்.

மற்றவர்கள் வீட்டுக்குச் செல்கையில் வாசலிலேயே நின்று அவசரமாகப் பேசிவிட்டுத் திரும்பி விடுவதும், அவர்கள் தம் வீட்டுக்கு வந்தால் வெகு நேரம் பேசுவதும் சிலரது வழக்கம்; மற்றும் சிலரோ தாங்கள் அயல்

அங்கச்சியம்மாளின் சிநேகிதையின் பெண்ணுக்குக் கல்யாணம் வந்தது. அக்கல்யாணத்திற்குத் தடபுடலான அலங்காரத்துடன் அங்கச்சியம்மாளும் அவள் குழந்தைகளும் தேர் அலங்கரித்ததுபோலப் புறப்பட்டார்கள். அவளுடைய ஆடம்பர தர்பாரில் திலகவதியை அழைத்துச் செல்லப் பிரியப்படவில்லை எனினும் தன்னுடைய குழந்தைகளைக் கட்டி மேய்த்துக்கொள்வதற்காக அவளையழைத்துக் கொண்டுபோக எண்ணினாள்.

210040

ஆடையாபரணங்கள் அலங்கரிக்கும் சிரமமற்ற திலகவதி தன்னுடைய அழுக்கற்ற உடையோடு தலையைச் சீவிப் பின்னல் போட்டுக்கொண்டு, பிறைச் சந்திரன் போன்ற நெற்றியில் கரேலென்ற சாந்துப்பொட்டும், கையில் சாதாரணமான கண்ணுடி வளையல்களும் அணிந்துகொண்டு புறப்பட்டாள். கல்யாண வீட்டில் வந்தவர்களெல்லாம் அங்கச்சியம்மாளின் அற்புத அலங்காரத்தின் விசேஷத்தைக் கண்டு வியப்போரும், பரிகஸிப்போரும், தூஷணையாகப் பேசுவோரும், ஒருவருக்கொருவர் கண் ஜாடை செய்து கண்ணைச் சிமிட்டுவோருமாக ஆண் பெண் அடங்கலும் இருக்கிறார்களே யன்றிக் கல்யாணப் பெண்ணையோ,பிள்ளையையோ கண்ணால் பார்க்கவே இல்லை.

தங்கக் கொடிபோல நிற்கும் திலகவதியின் சாந்தமான தோற்றமும், அமரிக்கையான நடத்தையும் காண்போர் மனத்தைக் கவர்ந்தன. அங்கச்சியம்மாள் எத்தனை சாதுவாக விருக்கிறாளோ அதற்கு அநுகுணமாகவே அவளுடைய குழந்தைகளும் அததன் சிறிய பிராயத்திற்கு ஏற்றவாறு துஷ்டத்தனமும் பிடிவாதமும் கொண்டிருந்தன. அந்த தடபுடலான விவாக கலபையில் இந்தக் குழந்தைகளைக் கட்டி மேய்ப்பதற்குள் திலகவதியின் குடல் அறுந்து விட்டது. அத்தனை ஜாக்ரதையாகப் பார்த்துக்கொண்டிருக்கையிலும் குழந்தையின் கை வளையல்களில் ஒன்றைக் காணாது போய் விட்டதை அங்கச்சியம்மாளே கண்டு விட்டாள்.

வீட்டில் சென்று மணி கணக்காக உட்கார்ந்து அவர்கள் வேலையைக் கெடுத்து விட்டுத் தங்கள் வீட்டுக்கு வருபவர்களை நிற்கவைத்தே பேசி அனுப்பிவிடுகிறார்கள்.

அவ்வளவுதான் வந்துவிட்டது ஆவேசம். விவாக வீடு, மரியாதை மனிதர்கள், அளவற்ற கூட்டம் என்பதைக் கூடச் சற்றும் கவனிக்காமல் தத்திக் குதித்துத் தாண்டவமாடி திலகவதியைக் கண்டபடி திட்டியவாறு "ஏண்டீ! இடிமாந்தடியைப்போல உன்னை இங்கு எதற்கு அழைத்துக் கொண்டு வந்தேன்? குழந்தையைக் கவனிப்பதை விட்டு என்ன செய்து கொண்டிருந்தாய்! குழந்தை தொலைத்து விட்டதென்று கூறி அதை நீயே களவாடிக் கொண்டு உன் சொந்த செலவுக்கு உபயோகப் படுத்தலாமென்று எண்ணினுயா! மானங்கெட்ட கழுதை! குழந்தையின் வளையல் எங்கே? தேடிக்கொண்டு வா!" என்று அட்டகாஸமாய்க் குலைக்க வாரம்பித்து விட்டாள்.

சில கல்யாண வீடுகளில் இவ்விதமான சம்பவம் சில சமயங்களில் நேர்ந்து விடுவதுண்டு. அச் சமயம் சொத்திற்கு உரிமையானவர்கள் சொல்லும் வார்த்தைகளும், ஆடும் ஆட்டமும், கல்யாணத்திற்கு வந்துள்ள மனிதர்களின் மனத்தை எல்லாம் புண்படச் செய்து விடுகின்றன. "நம் பேரில் சந்தேகப் படுவாளோ! பெட்டியைத் திறந்து காட்டி விடலாமா! மடியை உதறிக் காண்பித்து விடலாமா!" என்று சிலர் நடுங்கிச் சாவார்கள் பாவம்.

பணம் அதிகமாக இருந்து விட்டால் மட்டும் அதற்குத் தக்க மரியாதை, நற்குணம், பெருந்தன்மை, பார யோசனை முதலியன எல்லோருக்குமே அமைவதில்லை. பணத்தின் முகத்தையே அறியாத பரம ஏழைகளினிடமுள்ள பெருந் தன்மையும், லக்ஷணங்களும்,பணக்காரர்களில் சிலரிடம் காண்பதற்கே அரிதாகி விடுகின்றன. அவர்கள் மோட்டார் சவாரி செய்தாலுமில்லை; ஏரோப்ளேனில் பறந்தாலும் அவர்களின் அல்ப நினைவும் அதற்கேற்ற மற்றைய அம்சங்களுந்தான் குடிகொண்டிருக்கின்றன. 'எந்த சமயம் எப்படி சொன்னல் என்னவாகுமோ! நாம் இவ்வாறு கூக்குரலிடுவதில்

சிலர் வரும்போதெல்லாம் அவர்களுடன் சாவகாசமாகப் பேசுவதற்கில்லாது ஏதாவது அசந்தர்ப்பம் நேரிட்டு அதனுல் அவர்கள் நமக்கு அவர்களுடன் பேச இஷ்டமில்லையென்று நினைக்க இடமுண்டாகின்றது.

என்ன கஷ்டங்கள் நேருமோ!' என்ற யோசனையே சிலருக்கு இருப்பதில்லை. அவர்கள் பணக்காரராயிற்றே! என்று பிறர் முதலில் வெகு மதிப்பு வைக்கிறார்கள். அவர்களுடைய அல்பத் தன்மையையும் பிசினாறிக் குணத்தையும், சொந்த மனிதர்களாயினுங்கூட வெடுக்கு வெடுக்கென்று திட்டி அதிகாரம் செய்து பேசும் அழகையும் கண்டு முதலில் பிரமித்தவர்களே, 'அடாடா! இவ்வளவுதானா! பணத்தின் அழகு குணத்திலன்றோ மணக்க வேண்டும்! அது மாறிப் பெட்டியில் பரிமளிக்கின்ற ஜம்பந்தானா!'' என்று உப்பற்ற பண்டம் போலச் சப்பென்று சூ கொட்டி விடுகிறார்கள்.

பணத்தை நம்பியே மதித்து அதனால் ஒரு மனிதரைப் பற்றிப் பிரமாதமாக எண்ணி விடுதல் எப்போதும் தவறு. ஒரு உதாரணம் பார்க்கலாம். ஒருவருக்குப் பணமுடையான சமயம் பணக்காரரிடம் கடனை வாங்கிக் கொண்டு செலவிட்டு விடுகிறார். அந்தப் பணக்கார சினேகிதர் அந்தப் பணத்தைத் திருப்பிப் பெறுவதற்குள்ளே பதினாயிரம்தரம் ஆள் அனுப்பியும், கடித மெழுதியும், சற்று கோபித்தும், பொறுமையை இழந்தும், கண்டபடித் திட்டியும், 'அற்பனுக்குப் பணத்தைக் கொடுத்தேனே! பஞ்சைக்குப் பணத்தைக் கொடுத்தேனே!'' என்று அவர்களுக்கு வேண்டிய மனிதர்களிடத்திலேயே கூறியும், இன்னும் எத்தனையோ விதத்தில் தங்களின் நம்பிக்கையற்றத் தன்மையை—அல்பத் தன்மையை—நன்கு காட்டி விடுகிறார்கள். பணம் பெற்றவர்களுக்கு அதோடு அவர்களின் சினேகமும் முறிந்து விடுகின்றது.

அதே பணத்தை ஏழைகளிடத்தில் வாங்கி இருந்தால் அவர்களுக்கு மேற்குறித்தவாறு அட்டகாஸங்கள் செய்ய மனம் துணியாது. ஏனெனில் 'அவர்களுடைய யோக்யதைப்படிக்கு பணத்தைக் கட்டாயம் கொடுத்து விடுவார்கள். நாம் அல்பத்தனமாகக் கேட்பது கூடாது' என்று பொறுமையை இழக்காது காத்திருப்

வீதியில் செல்கையில் கண்ணில் படும் ஏழை உறவினரையோ சிநேகிதர்களையோ கவனிப்பதில்லை. ஆனால் வெகு தூரத்துச் செல்வவந்த உறவினரோ, சிநேகிதரோ காட்டிலோ மேட்டிலோ இருந்தாலும் அங்கு தேடிச் செல்வது சிலரது வழக்கம்.

பார்கள். பணம் பெற்றவர்கள் குறித்த தவணையும் தாண்டிப் பின்னும் தாமதப் படுத்தி விட்டால் அதற்குமேல் மரியாதையான வார்த்தைகளைக் கூறி, மரியாதையான வழியில் மொத்தவாகவோ, பாதிப் பாதியாகவோ பெற்றுக் கொண்டு சமரசத்திற்குப் பங்கமில்லாத வழியில் நடப்பார்கள். ஏழைகளிலும் சிலர் அல்பத்தனமாக நடப்பதும் உண்டு. அவ்வாறு நடப்பவர்களை 'ஏதோ வயிற்றின் கொடுமை, பணமின்மை, காலக் கஷ்டம். ஐயோ! பாவம்!' என்று கூறுவதற்கு ஓர் இடமுண்டு. பணத்தைப் படைத்து விட்டவர்களுக்கு என்ன ஆறுதல் கூறுவது?

மேற் குறித்த பணக்கார கோஷ்டியில் சேர்ந்த—நம்பர் முதலான பட்டம் வகித்த—அங்கச்சியம்மாளின் ஆர்ப்பாட்டமானது எல்லோருடைய மனத்தையும் கலக்குகின்றது. கல்யாணத்திற்கு வந்திருந்தவர்களின் குழந்தைகளுடன் இவள் குழந்தைகளும் விளையாடிக்கொண் டிருந்தமையால் 'நாம்தான் எடுத்துக்கொண்டு விட்டோம் என்று நினைப்பாளோ!' என்று எல்லோரும் நடு நடுங்கிய படியே "அம்மா! இதோ எங்கள் மடியைப் பாருங்கள்; எங்கள் பெட்டியைப் பாருங்கள் ; எங்கள் குழந்தைகளின் கையைப் பாருங்கள் ; இதோ ! இந்த இடத்தைப் பாருங்கள்; மூட்டையைப் பாருங்கள்." என்று ஒவ்வொருவராகக் காண்பிக்கின்றார்கள்.

அற்ப மதியுடைய அங்கச்சி எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டே பார்க்காதவள் போலவும், சந்தேகப்படாதவள் போலவும் அபிநயித்து, "நன்றாயிருக்கிறது. நீங்கள் எடுத்திருப்பீர்களா என்ன? ஒருகால் குழந்தையின் கையிலிருந்து நழுவி விழுந்திருக்குமோ!" என்று தந்திரமாகக் கூறிக்கொண்டே பெட்டி, மூட்டை முதலியனவற்றைக் கவனித்தாள். இந்த செய்கையினால் எல்லோருக்கும் அபாரமான அசங்கியமும், வெறுப்பும், கோபமும் உண்டாகி விட்டன. சிலர் வாய் விட்டும் அங்கச்சியம்மாளின் அற்ப புத்தியைப் பற்றிப் பேசினார்கள்.

சிலருக்குப் பிறர் எத்தனை வேலை செய்தாலும் நன்றியும் இல்லை திருப்தியுமில்லை. அதோடு போதாமல் அவர்களிடத்தில் ஒரு குற்றத்தை வேண்டுமென்று தானே கற்பித்துக் கொண்டு சற்றும் கூசாமல் "அவன்

கல்யாண வீட்டிலிருக்க வேண்டிய சந்தோஷமும் ஆரவாரமும், ஆநந்தமும் இந்த புண்யவதியால் மாறிப்போய் ஒவ்வொருவரும் நடு நடுங்கிச் சாகின்றார்கள். அங்கச்சியம்மாளின் ஆர்ப்பாட்டத்தைக் கண்டு ஆண் பிள்ளைகளும் வெறுத்துப் பேசுகிறார்கள். அங்கச்சியம்மாள் கல்யாண வீட்டிலுள்ள வேலைக்காரர்களையும், சமையல்காரர்களையும் நேருக்கு நேராகக் கேட்டு அதிகாரம் செய்தாள்.

இது கேட்ட சமையல்காரர்கள், "அம்மா! நீங்கள் வேண்டுமானால் எங்களை சோதனை போட்டுக் கொள்ளலாம். உங்களைப் போல நாங்கள் மகராஜர்களில்லை. காலை முதல் இரவு வரையில் நெருப்பின் பக்கலில் வெந்து வதங்கி கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கும் சொத்து—அரை வயிறுக் கஞ்சி—எங்களுக்கு நிலைத்தால் போதும். உங்கள் காப்பைத் திருடி எங்கள் வயிறு நிறைய வேண்டாம். நாங்களும் எத்தனையோ வீட்டில்—எத்தனையோ கோடீச்வரர்களின் வீட்டில்—சமையல் செய்திருக்கிறோம். எத்தனையோ செல்வச் சீமாட்டிகளைப் பார்த்திருக்கிறோம். இதுவரையில் உங்களிடம் பெற்ற மரியாதைப் பட்டம் பெற்றதில்லை. இளைத்தவன் தலையில் ஈறும் பேனும் என்பதுபோல சோற்றுக்குத் தாளம் போடும் எங்களைக் கண்டால்தான் திருட்டுப் பழி சுமத்துவதற்குப் பொருத்தமாகத் தோன்றியதுபோல விருக்கிறது. இம் மாதிரி பேசாதீர்களம்மா! உங்கள் பணமானால் உங்கள் வரையில். எங்களுக்கு அது பற்றி லக்ஷ்யமில்லை. அதிகமாக வாயை விடாதீர்கள். தனகோடி முதலியார் வீட்டில் வைரப் பதக்கம் கெட்டு விட்டதே. அவர்கள் வாயைத் திறந்திருப்பார்களா! அரைப் பவுன் இருக்குமோ இராதோ! இந்த காப்பிற்கு ஏழைகளின் வயிறெரிய எங்களை நிர்த்தாக்ஷண்யமாய் நீங்கள் கேட்பதுபோல அவர்கள் ஒரு பேச்சு பேசி இருப்பார்களா? நாங்கள் எங்கள் கையை யுழைத்துக் கஞ்சி

என்ன செய்வான்? இவ்வீட்டுச் சோற்றைத் தின்றுவிட்டுக் கொழுப்பு ஏறிவிட்டது. இவ்வீட்டுச் சோறு அத்தகையது" என்று கடு கடுத்துக் கூறினார்கள். இதைக் கேட்ட உழைப்பாளியின் மனம் எவ்விதமிருக்கும்?

குடிக்க வந்தவர்களேயன்றி களவாடிக் களிக்க வந்தவர்களல்லவென்பது எல்லோருக்கும் தெரியும். அவர்களின் சொத்து நல்லதாயிருந்ததாலும்—அவர்களின் பொறுமையின் பலனாலும்—அந்தப் பதக்கம் கிடைத்து விட்டது. நீங்கள் பணக்கார ஜம்பத்தைக் கொண்டு பேசாதீர்கள்'' என்று வயிறெரிந்து கூறினார்கள் அவர்கள் கூறியதைக் கேட்டு சிலர் சந்தோஷமே பட்டார்கள்.

அங்கச்சியம்மாளுக்கு அந்த வார்த்தைகளால் மூக்கு அறுந்து போய் விட்டது. கல்யாண வீட்டுச் சொந்தக்காரியை அழைத்து, "அம்மா! உங்கள் வீட்டுக் கல்யாணத்திற்கு வந்ததும் போதும்; என் பொருள் தொலைந்து வயிறெரிந்ததும் போதும். உங்கள் சமையல்காரர்கள், வேலைக்காரர் முதலிய அற்ப நாய்களிடம் வார்த்தை கேட்டதும் போதும். நான் புத்தி கெட்டு வந்தேனே! மானங்கெட்டு வந்தேனே! என்னைச் செருப்பாலடிக்க வேண்டும். சினேகிதை என்று வந்ததற்குப் பலன் போதும். வேலைக்காரக் கழுதைகளை விட்டு என்னைத் திட்டி அவமானம் செய்யவேண்டுமென்று என்னை அழைத்தாய்?'' என்று அபாரமாகச் சத்த மிட்டுக் கூறியவாறு, "ஏ! மூதேவியே! சனியனே! தண்டபிண்டத்துத் தடிப் பிணமே! உன்னால்தான் எனக்கு இக்கதி உண்டாகியது; உன்னை முழுவெடுக்க. நாசமாய்ப் போக! என் வயிறு எரிகிறதே! எனக்குச் சமதையாக உன்னை அழைத்ததற்கு இந்தப் பலன்தான் கிடைத்தது.'' என்று திலகவதியைத் திட்டி, அத்தனை பேர்களின் முன்னிலையில் அடித்து விட்டுத் தன் குழந்தைகளை இழுத்துக் கொண்டு கிளம்பி விட்டாள்.

இம்மாதிரியான அங்கச்சியம்மாள்கள் உலகில் அனேகரிருக்கின்றார்கள். கல்யாணம், சாவு முதலியன நடக்கும் வீடுகளில் இப்போதும் இத்தகைய ராக்ஷஸிகளின் தாண்டவத்தைக் காணலாம். அவர்கள் சொல்வது செய்வதெல்லாம் நியாயம். அதைத் திருப்பிப் படித்து விட்டாலோ வந்தது அனர்த்தம். அவ்வாறு

அற்ப விஷயங்களைப் பற்றியே எப்போதும் நினைத்துத் தடபுடல் செய்பவர்களுக்கு என்றும் பார புத்தியும், பெரிய விஷயங்களில் தலையிடுவதற்கு வேண்டிய சாமர்த்தியமும் உண்டாவதே யில்லை.

முறைத்துக் கொண்டு செல்வோரை வேண்டாமென்று சமாதானம் செய்வோர் ஏற்பட்டுவிடின் முறைப்பு பின்னும் அதிகமாய் விடும். இன்னும் புதிய புதிய நாட்டியமெல்லாம் ஆடத் தொடங்குவார்கள். அதை ஒரு கௌரவமாயும், ஜம்பமாயும் எண்ணுவார்கள்.

அதே போல அங்கச்சியம்மாள் அழுது, அனர்த்தம் செய்து, துணிகளைச் சுற்றிக் கொண்டு புறபட்ட உடனே வீட்டுக்காரர்கள் எத்தனை சமாதானம் சொல்லியும் பிணம் போல விறைத்துக் கொண்டு, திமிறிக் கொண்டு வீதியில் வந்தாள். ஒரு வண்டியைப் பேசிக் கொண்டு அதில் தானும், தன் குழந்தைகளும் மாத்திரம் அமர்ந்து கொண்டு "ஏ தடிப் பிணமே! உன் பவிஷுக்கு வண்டி யொரு கேடா! நடந்து வந்து சேரு. இங்கு கல்யாண வீட்டு ஆம வடை, போளி, பாயசம் கூடிய பிண்டத்திற்கு நின்றால் எலும்பை முறித்து விடுவேன்; பத்திரம்'' என்று கூறிப் பெரிய உத்திரவிட்டு விட்டுப் போய் விட்டாள். குதிரை வண்டியின் வேகம் கூற வேண் டுமா? அது சென்று மறைந்து விட்டது.

அப்போது பகல் சரியாக ஒரு மணி இருக்கும். வெய்யில் மண்டை வெடித்து விடும் போலக் காய்கின்றது. மேலே தலை வெடிக் கின்றது; கீழே கால் தத்தளிக்கின்றது. இந்த பட்டப் பகலின் உச்சி கால வெய்யிலின் கொடுமையில் பேய் பிசாசுகள் கூட வெளி யில் வராதென்று கூறுவார்கள். அவசரமான காரிய நிமித்தம் செல் கிறவர்கள் செருப்பும் குடையுமுடனும், அன்றி வண்டியிலும் செல் கிறார்கள். மேற் குறித்த வகையில் ஒன்றுமில்லாது தனித்துச் செல் லும் திலகவதியின் நிலைமை எவ்வாறு இருக்கும்?

விவாக வீட்டிலுள்ள அத்தனை பேரும் திலகவதியை அங்கச்சி யம்மாள் செய்யும் கொடுமையைக் கண்டு வியப்புற்றார்கள். திலக வதி அங்கு 5 நிமிடமும் தங்காது உடனே கிளம்பி விட்டாள். காலைக் கீழே பாவ முடியவில்லை. நெருப்பின்மீது வைப்பதுபோலச் சுரீலென்று எரிகின்றது. பலர் முன்னிலையில் திருட்டுப் பட்ட மும், அடியும், திட்டும் பெற்றதனால் திலகவதியின் மனம் புண் ணாகி தத்தளித்துத் தவிக்கின்றது. "நான் எத்தனை நாளைக்குத்தான் இத்தகைய கஷ்டத்தை யனுபவித்துத் தொலைய வேண்டுமோ ஈசா! என்னை ஏன் இவ்விதம் சோதிக்கின்றாய்! ஐயோ! நான் எங்கேனும்

சிலர் சொல்வதை யெல்லாம் கேட்டுக் கொண்டு சரியென்று தலை யாட்டி விடுவதே நல்லது. நமது புத்திக் கெட்டியதைச் சொன்னால் அவர்களுக்குக் கோபம் வந்து அதனால் அனுவசிய மனஸ்தாபம் நேரிடு கின்றது. தாள்ம் போடுகிறவர்களுக்கே இது காலம்.

சென்றுதான் இனி இப் பிராணனை மாய்த்துக் கொள்ளவேண்டும்." என்று பலவிதமான எண்ணங்களுடன் கண்ணீர் விட்டுக் கதறிய படியே வீதியில் நடக்கின்றாள்.

கால் தத்தளிக்கின்றது; பொரிந்து போகின்றது. நடக்கச் சற்றும் முடியவே இல்லை. வீதியிலுள்ள வீடுகளில் சற்று தங்குவதும் மீண்டும் நடப்பதுமாக ஒரு தெருவைத் தாண்டினாள். "இவ்வாறு செல்வதால் நேரமாகி விடுகின்றதே! அதற்காக வீட்டிற்குப் போனதும் பெரிய சன்மானம் கிடைக்கப் போகின்றதே!" என்ற பயம் ஒரு புறம் வதைக்கின்றது. அடுத்த தெருவில் சேர்ந்தார்ப்போல நிறைய கடைகளே இருக்கின்றனவாதலால் ஒதுங்குவதற்கும் இடமில்லை.

சோடாக் கடையில் கூடியுள்ள சில சோதாக்கள் தத்தளித் துருகியவாறு செல்லும் திலகவதியைக் கண்டு, பரிகாஸச் சிரிப்பு சிரித்து "ஏ பெண்ணே! ஊ. ஊ. கால் சுடுகிறது...ஹா...ஹா... கால் கொப்பளிக்கிறது. இங்கே வா! ஐஸ் போட்டு காலை யலம்பிக் கொள்ளலாம். ஐஸிலே போட்ட நைஸான கலர் சாப்பிடலாம். நிழலில் சுகிக்கலாம். வா!" என்று கூறுகின்ற மொழிகளைக் கேட்ட திலகவதியின் உள்ளம் வெயிலால் வெதும்பும் காலை விட அதிகமாக வெதும்புகின்றது. "ஐயோ! சோடா விற்கும் கடையா இது? அன்றி சோதாக்கள் வசிக்கும் கடையா! அட பாவிகளே! என்னைக் கண்டு உளறும் உங்கள் நாக்கு அழுகவே கடவுள் உங்களுக்கு இத்தகைய புத்தியைக் கொடுத்திருக்கிறார். உங்கள் பொழுதை நல்ல வழியில் கழிக்க மார்க்கமில்லையா! கடவுளே! என்னுடைய பாபத்தினால் இவ்விதம் அவர்களைக் கூறும்படியாகச் செய்கிறாயோ!" என்று மனந் தவித்தவாறு அவ்விடத்தில் நிற்காமல் சென்று கொண்டே இருக்கிறாள்.

அடுத்துச் செல்கையில் ஓர் மிட்டாய்க் கடையில் உட்கார்ந்திருக்கும் சிலர் "ஐயோ! துள்ளுதே; காலு துள்ளுதே! அப்பப்ப! சூடு பொறுக்காமெ ஆடுதே! ஏ பொண்ணே! இங்கே வா; நெழல்லெ உட்கார்ந்து மிட்டாய் துண்ணுப்புட்டு போவலாம்." என்று ஏளனமாகக் கூறினார்கள். எதற்கும் தான் செய்த விதியின் கூத்து இதெல்லாம் என்று எண்ணித் தலை நிமிராமல் கண்ணீர் வழிய தன்னால் நடக்கவே முடியாத நிலைமையிலும் தத்தளித்துக் கொண்டு போனாள். அவளால் சாத்யமே படவில்லை. வெயர்வை

இரவு பகலாக மூச்சு விடாது உழைக்கும் வேலைக்காரர்களுக்கு ஒரு காசு கொடுக்க மனம் வருவதில்லை. பூட்ஸ் காலின் ஒய்யார நடையினது ஓசை ஊரை அதிரச் செய்யும் வண்ணம் ஷோக்காக நகைத்துக்கொண்டு வரும் டாக்டர்கள் கையைப் பிடித்துப் பார்த்துவிட்டு 15 ரூபாயைத்

குபீர் குபீர் என்று வெள்ளமாகப் பெருகுகின்றது. தலை கிறு கிறு வென்று சுழலுகின்றது. மயக்கம் மேலிட்டு மூளை கலங்குகின்றது. "ஐயோ! இந்த வீதியில் என்னுடைய சுய புத்தியுடன் நடந்து வருகையிலேயே என் கதியை கேவலப் படுத்திக் கூறும்படியாக ஈசன் வைத்து விட்டானே! மயக்கமுற்று விழுந்து விட்டால் நம் கதி யாதாகுமோ! ஈசா! ஜகத்ரக்ஷகா! என்னை வீடு சேர்க்கும் வரையில் ஒன்றும் செய்யாதே யப்பா!" என்று வேண்டிக்கொண்டே நடக்கிறாள்.

இளந் தளிரைத் தீயில் போட்டு வாட்டினால் அது எவ்வளவு நேரம் தாங்கக் கூடும்? அடுத்த நிமிடம் கருகி விடுவதுபோல இளந் தளிருக்கு ஒப்பான திலகவதியின் கால்களில் வெய்யிலின் கடும் வெப்பம் தாங்கக் கூடாமல் முள் பொத்துவதுபோ லாய்விட்டது. காலைக் கீழே வைப்பதற்கே முடியாமல், தலை கிருகிருப்புடன் துவண்டு போய்ப் பிரக்ஞை யற்று நடுத் தெருவில் அதே வெயிலில் நடக்கையிலேயே விழுந்து விட்டாள். அந்த கோரமான காட்சியைக் கூறவேண்டுமா! அந்தோ! பரிதாபம்! பரிதாபம்! விதியின் வேகத்தினுடைய லீலைகளில் இதுவும் ஒன்றோ!

7—வது அதிகாரம்

காதலின் ஆழம் கடலினும் அதிகம்

ஆத்திர தேவதையாகிய அங்கச்சியம்மாள் வண்டி முற்றிலும் பிதற்றிக் கொண்டே வீட்டிற்குச் சென்றாள். அங்கச்சியம்மாளின் புருஷன் கல்யாண வீட்டிற்குச் சாயங்காலம் செல்வதாகக் கூறித் தம்முடைய உத்யோக வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தார். அவருக்கென வீட்டில் சமையல் செய்து வைத்திருந்ததைத் தாமே போட்டுக் கொண்டு சாப்பிட்டு விட்டார். கல்யாண வீட்டில் தாங்கள் லட்டு ஜிலேபியுடன் சாப்பிடப் போவதால் அவருக்கு மட்டும் சமையல் செய்யத் திலகவதிக்குக் கட்டளை இடப்பட்டது.

தட்டிப் பிடுங்கி ஜேபியில் போட்டுக்கொண்டு போய்விடுகிறார்கள். அவர்களுக்குக் கொடுப்பது சகஜமாய் விடுகிறது. படாடோபத்திற்குத்தான் காலம் இது.

கல்யாண வீட்டில் காலையில் காப்பிக்கும், பலகாரத்திற்கும் மட்டுமே அந்த அம்மாளின் அருமையான வயிறு பாக்கியம் செய்திருந்தது; சாப்பாட்டிற்கு அபாக்யமாகி விட்டது. பகல் ஒரு மணிக்குமேலாகிவிட்டது. பசியோ வயிற்றைக் கிள்ளுகின்றது. குழந்தைகளோ 'லபோ, திபோ' என்று கத்துகின்றன. இந்த நேரத்தில் அவள் வந்ததைக் கண்ட கணபதி "ஒருகால் பந்திக்கு முன்பு உட்கார்ந்து சாப்பிட்டு விட்டு வந்தாளோ" என்று எண்ணினார். அம்மாளுடைய முகத்தின் ஆவேசக் களையின் அலங்கோலத்தைக் கண்டால் அவர் எண்ணியதற்குப் பொருத்தமாக இல்லாதிருந்தது கண்டு "ஏன்! இதற்குள் விவாகம் முடிந்து விட்டதா? சாப்பாடு ஆய் விட்டதா?" என்றார்.

அங்க:—ஐயோ! வயிற்றெரிச்சலை ஏன் கேட்கிறீர்கள்? தரித்திர தேவியை அருகில் வைத்துக் கொண்டால் வரும் லாபம் எது? தரித்திரமேயல்லவா! அந்த சனியனை நான் இன்று கூட எதற்காக அழைத்துச் சென்றேன்? என்னுடைய குழந்தைகளைக் கவனிப்பதற்காக வன்றோ! அந்தப் பீடையை நம்பி குழந்தையை விட்டதற்குப் பலன் குழந்தையின் கை வளையல் ஒன்றைக் கெட்டுப் போக்கி விட்டது. அது உண்மையில் கெட்டதோ அன்றி அந்த சனியனே கழற்றிக் களவாடி விட்டதோ!" என்று அங்கு நடந்த சகலமான விஷயங்களையும் ஒன்று விடாது கூறினாள்.

இது கேட்ட கணபதி மிகவும் வருத்தத்தோடு, "அங்கச்சி! உனக்குக் கடவுள் மூளை என்பதே சற்றும் கொடுக்கவில்லை. அந்தப் பரதேசிப் பெண்ணை வையா விட்டால் உனக்குச் சோறு கிடைக்காது போலும். உன் ஆத்திர புத்தியில் அயல் வீட்டில் இத்தகைய ஆட்டமா ஆடிவிட்டாய்? ஐயோ! உன்னுடைய ஆத்திரத்தைக் கண்டு என்ன பரிகஸிக்கின்றார்களோ! நல்ல குணம், நல்ல எண்ணம் என்பதே உன்னிடம் காண முடியவில்லையே! நீ அலங்காரம் செய்து கொள்ளும் தடபுடலில், குழந்தைகளுக்குச் செய்யும் அவசரத்தில் நீ எதைத்தான் கவனித்தாய்! நீ சென்ற பிறகு நான் உள்ளே ஏதோ காரியமாகச் சென்றேன். அங்கு பார்த்தால் குழந்தையின் வளையல் ஒன்று பெட்டியின் பக்கத்திலேயே இருந்ததோடு, நீ வைரப் பதக்கம் போட்டுக்கொண்ட தடபுடலில் கெம்பு பதக்கத்தை மேஜையின் மேலேயே வைத்து விட்டாய் நான் பார்த்ததால் நகைகள் நின்றன. இன்னும் யாரேனும் பார்த்திருந்தால்

சிறிய பெண்ணாக இருப்பினும் தங்கள் வீட்டிற்குப் பிறர் வந்தால் அதிக நாள் தங்கவேண்டுமென்ற ஆசை, வற்புறுத்தல்; தான் அவர்கள் வீட்டிற்குச் சென்றால் ஒரு நாள் நிற்பதற்குள் ஆயிரம் வார்த்தைகளைக்

உடனே போய் விடாதா! வீட்டிலேயே நகையை வைத்து விட்டு மரியாதைப்பட்ட பலர் முன்னிலையில் இவ்விதம் செய்ததோடு அப் பேதைப் பெண்மீது பழியைச் சுமத்துகிறாயே! இது தருமமா! ஐயோ! நீ செய்து விட்டு வந்த வேலை எனக்குத் தலை இறக்கமாய், வெட்கமாயிருக்கிறதே! 'வீட்டிலேயே நகையை வைத்துக்கொண்டு இத்தனை அட்டகாஸம் செய்து விட்டாளே என்றும், மகா பணக் காரியாகக் காணப்படும் மனுஷி அற்ப மனுஷி; இந்த அரை பவுன் வளையலுக்கு இத்தனை அலங்கோலம் செய்து விட்டாளே! என்றும் பரிகஸித்து நகைக்க மாட்டார்களா! அவர்கள் வீட்டில் எத்தனை செல்வச் சீமாட்டிகள் எல்லாம் வந்திருப்பார்கள். அவர்களின் முன்பு கௌரவமற்றத் தன்மையில் நடந்து விட்டாயே! ஐயோ! உனக்கு என்றுதான் புத்தி வருமோ! இனி அவர்களின் முகத்தில் விழிக்க உனக்கு யோக்யதையே இல்லை.

நீயும் உன் குழந்தைகளும் வருவதற்கு வெய்யில், கால் சூடு என்று நினைத்தாயே! அந்த அனாதைப் பரதேசிப் பெண்ணின் காலில் மட்டும் லாடம் தைத்திருப்பதாக எண்ணினாயா! சீச்சீ! என்ன கெட்ட எண்ணம்! வெய்யிலின் கடுமையை வீட்டுக்குள் ளிருந்தே சகிக்கக் கூடவில்லையே! தாபம் தகிக்கின்றதே! அந்தப் பெண் இவ் வெய்யிலில் நடந்து வருவதற்குள் எங்கேனும் சுருண்டு விழுந்து இறந்துதான் போயிருக்கும். சீச்சீ! இரக்கமற்ற கட் டையே!" என்று திட்டியவாறு வீதியில் வந்தார். அங்கச்சியம்மாள் வந்த வண்டி அந்த தெருவில் இருந்தது. அதையே அமர்த்திக் கொண்டு வெகு வேகமாகக் கல்யாண வீட்டின் பக்கம் ஓட்டச் சொன்னார்.

வண்டியை இழுக்க மாட்டாது குதிரையே தத்தளிக்கின்ற தென்றால் மனிதர்களின் நிலைமையைக் கேட்க வேண்டுமா! நாம் முன்பு தெரிவித்தவாறு துவண்டு, வதங்கி, விழுந்து விட்ட திலகவதி யைச் சுற்றி அடுத்த நிமிடமே கும்பு கூடி விட்டது. "ஐயோ! பச் சைக் கிளியாட்டம் பெண்ணுயிற்றே! எந்த பாவிகள் மனங் துணிந்து இந்த அருமையான பெண்ணை இவ் வெய்யிலில் நடக்கச் சொன் னார்களோ! பாவிகள்!" என்று வீதியில் ஜனங்கள் கண்டபடியே திட்டுகிறார்கள்.

திலகவதி எந்த பக்கம் விழுந்தாளோ அதே பக்கத்தின் வீட் டுக்காரி வீதியில் குப்பை கொட்டுவதற்கு வந்தாள். அவள் இந்த

கூறிவிட்டு, சாக்குப் போக்குக்கள் சொல்லிக்கொண்டு போய்விடுவது. இந்த சாமர்த்தியம் பிறருக்குத் தன்னைப் பார்த்த பிறகு கூடவா தெரி யாமல் போகும். நடக்கும் வழிதான் தேயும்.

சம்பவத்தைக் கண்டு கூக்குரலிட்டுத் தானே வீதியில் ஓடி திலக வதியைத் தன் வீட்டுக்காரருடைய உதவியால் தூக்கிக்கொண்டு வந்து தன் வீட்டுக் கூடத்தில் படுக்கவைத்தாள். வேண்டுமென்றே சித்திரப் பதுமையைச் செய்து வைத்தது போலான அழகுடைய வனிதாரத்தினத்தின் பால் வடியும் முகத்தைக் கண்டு இரங்காத மனமும் உண்டா?

அவ்வீட்டுக்காரியின் மனம் தத்தளித்து விட்டது. தாமரை மலருக்கு ஒப்பான திலகவதியின் முகம் செக்க செவேலென்று வாடி, வெய்யிலில் கன்னிவிட்டது. பதும மலருக்கொப்பான இரு பாதங்களும் ஒவ்வொரு கொப்புளமும் மிளகு அளவும், கடுகு அளவுமாகக் கொப்பளித்து ரணக் காடாகக் கிடக்கின்றது. இதைக் கண்ட அவ்வீட்டுக்காரி கண்ணீர் தாரை தாரையாகப் பெருக விட்டு விட்டாள். குளிர்ந்த ஜலத்தை அள்ளி அவள் முகத்தில் தெளித்து பனிக்கட்டியைக் கொண்டு வந்து வாயில் மெல்லப் போட்டார்கள். தேங்காய் எண்ணெயைக் கொணர்ந்து காலில் தடவினர்கள். தேகம் முற்றும் குளிர்ந்த ஜலத்தைத் தெளித்து விசிறி கொண்டு விசிறினர்கள். சோடாவும் ஐஸூம் கலந்து வாயில் வார்த்தார்கள்.

இதற்குள் "அதிக வெய்யிலின் வெப்பத்தால் மூளை கொதிப்புற்றிருப்பதால் குளிர்ந்த ஜலத்தைத் தலையில் கொட்டுவது நலம்" என்று சிலர் கூறினர்கள். அங்ஙனமே குளிர்ந்த ஜலத்தைக் கொட்டிக் கொண்டிருந்தார்கள். இத்தனைக்கும் திலகவதிக்கு ப்ரக்ஞை சற்றும் உண்டாகவில்லை. மூச்சு மட்டும் வருகிறது.

இந்த நிலைமையில் அவ்வீதியில் செல்லும் ஜனங்கள் எல்லாம் வீட்டிற்குள் நுழைந்து பார்த்து விட்டு "ஐயோ! பாவம்! ரதி தேவி போலப் பொண்ணு, சாவக் கிடக்கிறது. உயிர் வருமோ, பூடுமோ!" என்று பேசிக் கொண்டு அவ்வீட்டிலிருந்து இறங்குவதைக் கண்ட கணபதி திலகவதியைப் பற்றித்தானிருக்குமோ என்று எண்ணிய வாறு அவ்விடத்திலேயே வண்டியை நிற்கச்செய்து விட்டு, உள்ளே சென்று பார்க்கத் திலகவதியின் பரிதாபகரமான நிலைமையும், முக மறியாத அன்னியர் காட்டும் அன்பும் ஒன்றுகூடி அவருக்கு அளப்பரிய ஆச்சரியமும், அபாரமான மன வருத்தமும் உண்டாக்கி விட்டன.

இரண்டு காதுகளைக் கொடுத்த கடவுள் ஏன் ஒரு நாக்கை மாத்திரம் கொடுத்திருக்கிறாரெனில் நம் காதுகளால் கேட்கும் விஷயங்களில் பாதியையே வெளியில் சொல்வதற்காகத்தான். ஆனால் இக்காலத்தில்......

கண்ணில் நீரும் அவரை யறியாதபடி வந்து விட்டது. மெல்ல அருகில் சென்று அமர்ந்தார். அவர்தான் அப் பெண்ணின் சொந்தக்காரர் என்று அறிந்த வீட்டுக்காரர் "என்னய்யா! இந்த வெய்யிலில் கூட இத்தகைய சுகுமாரமான பெண்களை யனுப்பலாகுமா! இப்போது ஆகுங் காரியம் வெய்யில் தாழ ஆகாதா? இந்த வெய்யிலினுல் (ஸன் ஸ்ட்ரோக்) எத்தனையோ பேர்கள் இறந்துவிட்டதாகத் தாங்கள் தினம் பத்திரிகையில் படிக்க வில்லையா! நேற்று கூட ஒரு அம்மாள் போய்க்கொண்டே இருக்கையில் தத்தளித்து விழுந்து இறந்து விட்டதை என் கண்ணுல் பார்த்தேன். அவசர காரியமாக விருந்தால் கூட இவ் வெய்யிலில் வெளிக் கிளம்ப முடியுமோ? இவள் முகத்தையும் காலையும் பாருங்கள். கன்ராவியாக விருக்கிறது." என்று படபடத்துச் சரமாரியாகப் பொழிந்தார்.

இதைக் கேட்ட கணபதிக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. "தன் மனைவியின் குற்றத்தை, மடத்தன்மையை, வஞ்சக எண்ணத்தைக் கூறுவதா! திலகவதியின் மீதே தப்பிதங் கூறுவதா!" என்று தெரியாமல் திகைத்தார். பிறகு பேசத் தொடங்கி "உம். எல்லாம் கால வித்யாசம் இவ்வித மெல்லாம் ஆபத்து வருகிறது!" என்று வழ வழ விளக்கெண்ணெயாகப் பேசிப் பின்னர் "நான் வீட்டுக்குக் கொண்டுபோகிறேன்" என்று கூறி அவர்கள் செய்த உபகாரத்திற்குப் பிரதி வந்தனங்கள் செய்தார்.

வீட்டுக்கார அம்மாள் மெல்லிய குரலால் "சற்று ப்ரக்ஞை வந்தவுடன் அழைத்துச் சென்றுல் என்ன? இவ்விதம் கிடக்கும் நிலைமையில் எப்படிக் கொண்டு போக முடியும்?" என்றுள். அதற்குள் அருகிலிருப்போரில் சிலர் "அடீ! பேசாமலிரு. இது கிடக்கும் நிலைமையைப் பார்த்தால் பயமாக விருக்கிறது. கண்ணை மூடி விட்டால் என்ன செய்வது. அவர்கள் வீட்டிற்கே யனுப்பி விடு.' என்று உபதேசம் செய்தார்கள். அதன் பிறகு கணபதி இந்த உபதேசத்தை யறியாது "அம்மா! நீங்கள் செய்த உபகாரத்தை என்றைக்கும் நான் மறக்கவே மாட்டேன். நான் வீட்டிற்குக் கொண்டு போய் டாக்டரை வரவழைத்துப் பார்க்கலாம் என்று நினைக்கிறேன்; சென்று வருகிறேன்." என்று கூறியவாறு திலகவதியைக் குழந்தையைப் போலத் தூக்கி எடுத்துக் கொண்டு வந்து வண்டியில் படுக்க வைத்தார்.

சிறு துரும்பும் பல் குத்த உதவும் என்கிறபடி மிகவும் அற்பமானவர்களிட மிருந்தோ, கெட்டவர்களிட மிருந்தோ கூட சில சமயம் நமக்கு மிகவும் உயர்ந்த புத்திமதிகள் கிடைக்கின்றன.

அப்போது வீதியில் கும்பல் கூடி விட்டார்கள். "ஐயோ! பாவம்! உயிர் வருமோ! பூடுமோ! கிளியாட்டம் பொண்ணு, என்னய்யா ஒடம்புக்கு, காச்சல் கீச்சல் வந்திடிச்சிங்களா?" என்று ஜனங்கள் கேட்டவாறு வண்டியை விட இடமில்லாதபடி வளைத்துக் கொண்டார்கள். வண்டிக்காரன் "ஏய்! ஏய்!" என்று தனது சங்கீதத்தைப் பாடத் தொடங்கினன்.

அச்சமயம் நமது சுகுமாரன் தன் சினேகிதனின் வீட்டிற்கு ஏதோ காரியார்த்தமாகச் சென்று விட்டுத் திரும்பி வந்தான். வரும் வழியில் ஒரு வண்டி நிற்பதையும் அதைச் சுற்றிக் கூட்டம் சூழ்ந்திருப்பதையும் அவர்கள் ஏதேதோ பேசுவதையும் கண்டதும் அங்கு என்னவென்று பார்க்க எண்ணிக் கும்பலை விலக்கிக் கொண்டு வெகு வேகமாய் வண்டி யருகில் வந்து பார்த்தான்.

அவ்வளவுதான் அவனுடைய வியப்பிற்கு எல்லையே இல்லை. தன்னுடைய காதல் தேவதை அவ்வாறு வண்டியில் கிடக்கும் காட்சிக்குக் காரணம் இன்னதென்று அறியாமல் திடுக்கிட்டுத் திகைத்து விட்டான். திலகவதியின் காலில் உண்டாகியுள்ள கொப்பளங்கள் இவன் கண்ணில் பட்டதும் தீயை மிதித்தவன் போல "ஹா! இதென்ன தீப்பட்ட கொப்பளம் போல விருக்கிறதே? என்ன ஆபத்து வந்து விட்டதோ என்று பதைபதைத்தவாறு கணபதியை நோக்கி "ஐயா! இந்த அம்மாளுக்கு என்ன உடம்பு? காலில் ஏன் இவ்விதம் கொப்பளம் கண்டு விட்டது?" என்முன். அங்கு அருகில் முதலிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த ஒருவன் நடந்த விஷயத்தைக் கூறினன். இதைக் கேட்ட சுகுமாரனின் உள்ளம் துடித்தது; தத்தளித்தது. கண்களில் நீர் முட்டுகிறது. தனது மனநிலைமை பிறருக்குத் தெரிந்துவிடப் போகிறதே! என்கிற ஒருவித பயம் பாதிக்கின்றது. இத்தகைய நிலைமையில் தத்தளித்துக் கொண்டிருக்கையில் வண்டி கிளம்பிச் சென்று விட்டது.

இந்த விதமான கோர காட்சியைக் காணப்போகிறோம் என்று சற்றும் எதிர்பாராத சுகுமாரனுடைய மனம் அபாரமான திகிலையும் கலக்கத்தையும் அடைந்து விட்டது. கஸ்தூரி பாயிக்கு ஏதோ பேராபத்து வந்து விட்டது. இனி தன்னை மோசம் செய்து மாய உலகத்தை விட்டு மறைந்துவிடப் போகிருள் என்கிற பெருந் துயரத்தினல் சில நிமிடம் ஒன்றுமே தோன்றுது மூளை கலங்கிவிட்ட

நாம் பேசுவதற்குப் பதில் சொல்வதிலிருந்து ஒருவருடைய குணத்தைக் கண்டு பிடிப்பது கஷ்டம். ஆனல் நம்மைக் கேட்கும் கேள்விகளிலிருந்து அவர்களது குணத்தை ஒருவாறு அறியலாம்.

வன் போல நின்றான். "இனி நாம் இவ்வாறு நிற்பது சரி இல்லை. கஸ்தூரிபாயினுடைய வாக்கின்படி இதுகாறும் அவள் வீட்டை யறியாமலிருந்தோம். இந்த நிலைமையில் நாம் அவ்வாறு இருப்பது சரி இல்லை.'' என்று தனக்குள் எண்ணிக் கொண்டு, தனது விடுதிக்குப் போகாமலேயே அந்த வண்டி சென்ற வழியோடு மனம் பதைக்க, உள்ளம் துடிக்கக் கண்ணீர் பெருக நடந்து சென்றான்.

அவனுடைய மனோ நிலைமையில் "வண்டியைத் தாவி ஓடி விடலாமா! அந்த அற்புத வடிவின் பக்கலில் அமர்ந்து அவளுக்குச் செய்ய வேண்டிய சிகித்ஸையைச் செய்யலாமா!'' என்று தவிக்கின்றான். பித்தன் போல வண்டியின் மேல் வைத்த கண்ணை வாங்காமல் சென்று கொண்டே இருந்தான் தன் காதலுக்கு என்ன விதமான பங்கம் ஏற்பட்டு விடுமோ! தெரியவில்லையே! என்று பலவிதமாக எண்ணியவாறு சென்றான்.

வண்டி மூன்று, நான்கு தெருக்களைத் தாண்டிப் பின்னர் கணபதியின் வீட்டு வாசலில் நின்றது. அங்கச்சியம்மாள் "நாம் நகையை வீட்டிலேயே வைத்து விட்டு மறதியினால் பெரிய மனிதர்களின் வீட்டில் மூடத்தனமாய் இவ்விதமெல்லாம் செய்து விட்டோமே! ஏற்கெனவே எல்லோரிடமும் கெட்ட பெயர் வாங்கியுள்ள நாம் அனேகரின் முன்னிலையில் அந்தப் பெண்ணை அடித்துத் திட்டி நம்முடைய உண்மை நிலையைக் காண்பித்து விட்டோமே! அடடா! என்ன மறதி ஏற்பட்டு நம்மை மோசம் செய்து விட்டது. பசியோ வயிற்றைப் பிச்சுகின்றது. மீண்டும் கல்யாண வீட்டிற்குச் சென்றால் அதை விட அவமானம் வேறு எதுவுமே இல்லை. அந்த மூதேவிப் பெண்ணோ இன்னும் வரக் காணவில்லை. தேடிக்கொண்டு சென்ற மனிதரையும் காணோம்! ஓட்டலிலிருந்து வரவழைப்பதற்கும் ஆள்களில்லை. என்ன செய்வது?'' என்று சற்று நேரம் வருத்தமுற்றாள்.

குழந்தைகள் "சாதம்! சாதம்!'' என்று கத்துகின்றன. எழுந்து உள்ளே சென்று பார்த்தாள். திலகவதிக்குத் தினம் இண்டியன் காப்பிதான் (பழையது) வழக்கம் அந்த காப்பி (பழையது) ஒரு ஈயப் பாத்திரத்தில் புளித்துக் கொண்டிருந்தது. அதைப் போன்ற தேகத்திற்குப் புஷ்டி தரும் பதார்த்தம் எதுவும்

'நமது உழைப்பினால் பணம் சம்பாதிக்கிறோம்.' என்று சொல்பவர் பலவித மனிதர்களிடம் பேசுவதாலும், பல விஷயங்களைக் கவனிப்பதாலும் நமது அறிவை விருத்தி செய்து கொண்டு இன்னும் நன்றாக உழைக்கலாமென்பதைக் கவனிப்பதில்லை.

இல்லை என்பதைத் தெரிந்து கொண்டும் அதை வெறுத்து விலக்கி விட்டு, நவீன முறையின் ஜோரில் மயங்கி வியாதியை உண்டாக்கும் காப்பிக் குடியை நாம் எல்லோரும் கையாண்டு வருகிறோம்.

பழைய சாதத்தின் மகிமையை நன்குணர்ந்த பெரியார்களின தேக வலிமைக்கும், புதிய காப்பியைத் தீர்த்தம் குடிப்பது போல தாகத்திற்கு முதல் உபயோகிக்கும் புதிய மனிதர்களுடைய வலுவிற்கும் எவ்வளவோ வித்யாச மிருப்பதையும் நாமே உணர்கின்றோம். அறிந்து பயனென்ன? நாகரிகப் பேய் பிடித்த செய்கைகளில் இது பலமான பூதம் பிடித்த செய்கை யாகும். காப்பி குடி மகா கெடுதல் என்று டாக்டர்கள் உபதேசம் செய்து கொண்டே நோயாளியை நிறுத்தச் சொல்கிறார்கள். தாங்களோ அதை நிறுத்தி விட்டதாகக் கனவு கண்டால், உடனே அலறியடித்துக் கொண்டு எழுந்து, விடியற் காலத்துக் கனவு எங்கே பலித்துவிடுமோ என்ற பயத்தினால் அதைப் பலிக்க விடாது அந்த நேரத்திலேயே காப்பி தயார் செய்து பல் தேய்க்காமலும் குடித்து விட்டு மறு காரியம் செய்கிறார்கள். நம்முடைய சமூகங்களில் அனேக செய்கைகள் விலக்கத் தக்கனவும் வெறுக்கத் தக்கனவும் என்பதை யுணர்ந்தும் வெறுக்காமலும் விலக்காமலும் நடத்தி வருகிறோம்.

பழைய சாதத்தைக் கண்டால் சாக்கடையிலுள்ள அசங்கியத்திற்கு ஒப்பாக மதித்து,வெறுத்து, "உவ்வ.உவ்வ." வென்று குமட்டலுடன் பார்த்து வந்த அங்கச்சியம்மாள் அன்று அந்த பழையது பாத்திரத்திலிருந்ததைக் கண்டு தான் செய்த பாக்யந்தான் இதேனு மிருந்தது என்று சந்தோஷித்தாள். பசி வந்தால் பத்தும் பறக்குமன்றோ! வெறுப்பும், அசங்கியமும் எங்கு சென்று ஒளித்துக் கொண்டனவோ?

பழைய சாதத்தின் ருசியை அன்றுதான் அங்கச்சியம்மாள் பார்க்கத் தொடங்கினாள். மாங்காய் ஊறுகாயை எடுத்து வைத்துக் கொண்டு அந்த சாதத்தை உப்பு போட்டுக் கலந்து ஒரு உருண்டை போட்டுக் கொண்டாள். ஆகா! அந்த பசி வேளைக்கும், மண்டை வெடிக்கக் காயும் வெய்யிலின் வெப்பத்திற்கும் சில்லென்று ஐஸ் போலான குளிர்ச்சியுடன் சிறு புளிப்பாய் கம கமவென்று மணம் வீசிக்கொண்டிருந்த பழைய சாதமானது, அப்போதே திருப்பாற் கடலைக் கடைந்து அம்ருதம் திரட்டி அங்கச்சியம்மாளின் வாயில் போட்டது போலான பிரம்மானந்தத்தை யடையச் செய்ததால் 'அபக்கு, அபக்கு, அபக்கு' என்று உருட்டி, உருட்டி ஒரு கவளம் விழுங்குவதற்குள் மற்றொன்றை வெகு வேக

மாக உள்ளே தள்ளுகிறாள். உப்பு போட்டுக் கரைத்த சாதத்தின் ரசத்தை (சாத்தீர்த்தம்) கையினால் ஏந்தி மாடு தொட்டியை உரிஞ்சுவது போல புற் புற் புற் என்று உரிஞ்சுகின்றாள்.

அகாத பசியுடனிருக்கும் அங்கச்சியம்மாளுக்கு "இது உண்மையில் சாதமா, பழனியாண்டவனுடைய பஞ்சாமிருதமா, திருவல்லிக்கேணி பார்த்தஸாரதி ஸ்வாமி கோயில் சர்க்கரைப் பொங்கலா!" என்று ப்ரமிப்பு உண்டாகி விட்டது. தான் உண்ணும் வைபவத்தில் குழந்தைகளை மறந்து விடுகிறாள்.

குழந்தைகளோ! "அம்மா! என்னம்மா நீயே தின்று விடுகிறாய்! எனக்குப் போடம்மா! எனக்குக் கொடம்மா!" என்று கத்துகின்றன. ஒரு உருண்டை குழந்தைகளுக்குப் போட்டால் அதன் மத்தியில் 4 உருண்டைகள் பகாசுரனைப்போல—கபந்தனைப் போல—விழுங்குகின்றாள். பணக்கார ஷோக்கில் சிலர், நவ நாகரிகத்தின்படி காப்பி, பலகாரம் வைத்தால் அதை முற்றும் புசிக்காமல் கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு மிச்சப் பிரசாதம் கயாவாளிகள் மாதிரி வைத்து விடுவது வழக்கம். அன்று கல்யாண வீட்டில் அங்கச்சியம்மாளுக்குக் கொடுத்த காப்பி, பலகாரத்தை பல பேர் மத்தியில் அந்த வித ஷோக்குடனேயே சாப்பிட்டதால் அடங்காத பசியுண்டாகி விட்டது. மேலும் சில பணக்காரர்கள், வீட்டிலேயே தம் வயிறு நிறைய சாப்பிட்டுவிட்டு மேற்குறித்தவாறு செய்வார்கள்.

அற்பத்தில் முதல் நம்பரான அங்கச்சியம்மாள் அன்றைய தினம் தமக்காகச் செலவழியும் பால், காப்பிப் பொடி, சர்க்கரை, டிப்பன் செய்யும் செலவு, சாப்பாட்டுச் செலவு முதலியன மிச்சமாகும் பொருட்டுப் பட்டினியாகச் சென்று விட்டதால், பசி உயிர் போய்விடும் போலாய் விட்டது. குழந்தைகளுக்கும் ஏதோ ஒருவாறு போட்டு விட்டுத் தானும் சம்பூர்ணமாய் உண்டு, பழயது வைத்த பாத்திரத்தை மட்டும் மிச்சம் செய்து விட்டாள்.

பழையது ஊறுகாயுடன் சாப்பிடும் பொழுது "டொக்கு. டொக்கு." என்று அடுத்த வீடு வரையில் கேட்கக் கூடிய நொட்டையைப் பலமாக விட்டுக்கொண்டே புசித்தாள். அந்த ருசியை நினைத்து நினைத்துச் சாப்பிட்ட பின்னரும் அடிக்கடி நொட்டை விட்டுக் கொண்டே "ஆகா! பழையதின் ருசி இன்றல்லவோ தெரிந்தது! இன்னும் கொஞ்சம் இருந்தாலும் சென்றிருக்கும். அதான் திலகவதி இதைச் சற்றும் சலிக்காமலும், வெறுக்காமலும் நன்றாகத் தின்று கொழு கொழு என்று வெள்ளிக்கிழங்குபோலாகிறாள்.

எத்தனைதான் பாலை நிறைய விட்டுக் காப்பியை மூன்று வேளை கொடுத்தாலும் குழந்தைகளின் உடம்பு நன்றாகத் தெளியவில்லை; இதும்புக் கூடு வெளியில் காட்டுகிறதே என்று கவலைப்படுவோமே! இந்த பழைய சாதத்தைத் தின்று திலகவதி கொழுப்பதென்ன! பாலையும், நெய்யையும் குடித்துக் குழந்தைகள் இளைப்பதென்ன! என்று நாம் யோசிப்போமே! பழையது நல்ல புஷ்டியை யுண்டாக்கும் என்பதை இன்று அதன் ருசியினால் கண்டு கொண்டேன். இனி நமது குழந்தைகளுக்குப் பழையத்தைப் போட்டுக் காப்பியை வேண்டுமானால் பிறகு கொடுப்போம்'' என்று தீர்மானித்துக் கொண்டபடி தாம்பூல சகிதம் ஊஞ்சப் பலகையில் அட்டகாஸமாய் ஆடிக் கொண்டிருந்தாள்.

அந்த சமயம்தான் நாம் முன்னர் தெரிவித்தபடி கணபதி திலகவதியை வண்டியில் கொண்டு வந்தார். சிறிய குழந்தையைப் போல கணபதியே திலகவதியைத் தூக்கிக்கொண்டு உள்ளே வரும் காட்சியைப் பார்த்து அங்கச்சி விவர மறியாது திடுக்கிட்டாள். ''என்ன! என்ன!'' என்று அலறியவாறு எழுந்தாள். கணபதி ஆட்டுக் குட்டிபோலத் தூக்கிக் கொண்டு வந்த திலகவதியை அந்த ஊஞ்சப் பலகையின்மீது படுக்க வைத்தார். அங்கச்சியம்மாளை ஆத்திரத்துடன் திட்டி, நடந்த வரலாறுகளைக் கூறினார்.

எத்தகைய கல்லைப்போன்ற கடின சித்தத்தை யுடையவர்களாக விருப்பினும் மூச்சுப் பேச்சின்றி பிணம்போலக் கிடக்கும் இப் பேதையின் பரிதாபத்தையும், காலில் உண்டாகி இருக்கும் கொப்பளத்தையும் கண்டு கலங்காமலிருக்க முடியுமா! கொடிய நாக சர்ப்பத்திற்கு ஒப்பான அங்கச்சியம்மாளின் மனத்தையும் அந்த கால் கொப்பளங்கள் சற்று அசைத்து விட்டனவென்றால் வேறு என்ன கூற வேண்டும்? ''ஐயோ! இதென்ன அனியாயம்! வெய்யிலினாலா இத்தனை கொப்பளங்கள் உண்டாகி விட்டன! இத்தகைய கொடிய வெய்யிலா காய்கின்றது!'' என்று திகைத்துக் கூறினாள்.

அந்தோ! வீதியிலேயே மனந் தவித்தவாறு நிற்கும் சுகுமாரன் இந்த வீட்டின் அடையாளங் கண்டு கொண்டான். ''நான் சற்றும் முகமறியாத அன்னியனாயிற்றே! அவர்கள் வீட்டிற்கு எவ்விதம் செல்வது? என்ன விதமாக நம் காதலியைக் காண்பது?'' என்று தத்தளித்தவாறு வீதியிலேயே ஒரு ஓரமாக நிற்கின்றான். கணபதி அதே வண்டியில் ஓர் டாக்டர் வீட்டிற்குச் சென்று வைத்தியரை அழைத்து வந்து காட்டினார்.

வைத்தியர் நன்றாகப் பரீக்ஷித்துப் பார்த்துவிட்டு "வயிற்றில் அடியோடு ஆகாரமில்லாது, பட்டினியாகக் கிடந்தமையினால் ஸன் ஸ்ட்ரோக்கினால் உடனே அதிர்ச்சி உண்டாகிவிட்டது. மூளையை நன்றாகத் தாக்கி இருக்கிறது. இன்னும் 24 மணி நேரம் வரையில் இதை நம்புவதற்கில்லை. அதற்கு மேற் பட்டால் பிழைத்துக் கொள்ள லாம்; பிறகு பயமே இல்லை. அது வரையில் நம்மாலானவற்றைச் செய்து பார்ப்போம். கடவுள் இருக்கிறார்" என்று கூறித் தக்க அவுஷதங்களைக் கொடுத்து, உபயோகிக்கும் முறையைத் தெரிவித் தார். ஒரு தாதி கூடவிருந்துதான் செய்ய வேண்டுமென்று சொல்லித் தன்னுடைய நர்ஸையே அனுப்புவதாகக் கூறிச் சென்றார்.

சற்று முன்பு கருணைக் குணம் கொஞ்சம் உண்டாகிய அங்கச் சியின் மனத்தில் "ஐயோ! பாழும் பெண்ணால் பணச்செலவுண்டாகும் காலம் வந்து விட்டதே! தாதிக்கு ஒரு நாளைக்கு 10—15—பணம் கொடுப்பதற்கு முடியுமா! நம் வீட்டு வேலைக்காரியே போதுமென்று கூறி அவளை நிறுத்திவிட்டாள். வைத்தியர் சொல்லியது ஒன்று; இவள் செய்வது ஒன்றாக வேலைக்காரி செய்ய வாரம்பித்தாள். எந்த தொழிலை யார் யார் எப்படி நடத்த வேண்டுமோ அப்படிச் செய்ய அந்த தொழில் முறை தெரிந்தவர்களுக்குத்தான் சாத்யமாகும். தெரியாதவர்கள் செய்தால் வேறு கோளாறுகள் புதிது புதிதாக உண்டாவது நிச்சயமே.

அந்த டாக்டர் எங்கு இருக்கிறார் என்பது சுகுமாரனுக்குத் தெரியுமாதலால் அவர் சென்ற பிறகு வீதியிலேயே நின்றான். மனங் கேட்கவில்லை. எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிப் புண்ணாகின் றான். "இங்கு நிற்பதில் பயனில்லை. டாக்டர் வீட்டிற்குச் சென்று விசாரிப்பது நன்று" என்று எண்ணி அங்கு ஓடினான். தான் அவர்க ளுக்குச் சொந்தக்காரன்போல நடித்து விசாரித்தான். டாக்டர் இங்கு கூறிய வரலாற்றையே கூறி விட்டார்.

அந்தோ! அவ் வார்த்தை காதில் பட்டதும், சுகுமாரனின் உயிரே போய் விட்டது போலாய் விட்டது. தன்னுடைய மாறுதலை டாக்டர் எங்கு தெரிந்து கொள்வாரோ என்கிற அச்சம் ஒரு புறம் பாதிக்கின்றது. அதற்குமேல் அவனால் நிற்கவோ பேசவோ முடியவில்லை. நேரே தன் விடுதிக்குச் சென்றான். அங் கும் இருக்கை கொள்ளவில்லை. மீண்டும் திலகவதியின் வீட்டு வாச லில் வந்து நின்றான். அவர்கள் வீட்டு பாற்காரன் வந்து பால் போட்டு விட்டுச் செல்வதைக் கண்டு அவனை மடக்கி விசாரித்தான். பால்காரன் திலகவதியின் பக்ஷமாக அனுதாபப்பட்டுக் கண்ணீர்

உதிர, அங்கச்சி திலகவதியைச் செய்யும் சகலமான கொடுமைகளையும், திலகவதியின் சாந்தத்தையும், நற் குணத்தையும் பற்றிக் கூறி, "உம். இத்தகைய நல்ல கொழந்தையாவது பொயக்கறதாவது. காலில் உண்டான கொப்பளத்திலிருந்து அதன் உயிர் எப்படி துடித்திருக்கும் என்று பாருங்கள். இப்பவோ; அப்பவோ! என்று தான் அது இருக்குது." என்று கூறிப் போய் விட்டான்.

இது கேட்ட சுகுமாரனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. இத்தனை கொடுமைகளினால் அவஸ்தைப் படுவதால்தான் என்னை வீட்டிற்கு வரக் கூடாது. யார் என்றும் கேட்கலாகாதென்று அவள் கூறினாள். ஐயோ! இச் சமயத்தில் நான் சென்று பார்த்தால் இன்னும் சந்தேகங்களும் சங்கடங்களும், அன்றோ உண்டாகும். என்ன செய்வேன்! ஆ! கண்ணே! என் எண்ணத்தில் மண்ணைப் போட்டு விடுவாயோ! இப்போது நான் உள்ளே செல்வதற்கு என்ன முகாந்திரத்தைக் கூறலாம். அவ்வாறு சென்றால் அந்த கோராமையைக் கண்டதும் மனம் மிக்க தவித்து என் உள்ளக் கருத்தை வெளியாக்கி விடுமானால் தானாக போகப் போகும் பிராணனை அந்தஅம்மாளே அனுப்பி விடுவாளே!...உம். விதி விட்ட வழியாகட்டும். என்னால் உபகாரமில்லாவிடினும் உபத்திரவமில்லாவிட்டால் போதும்" என்று எண்ணினான்.

24 மணி நேரம் ஒன்றுமில்லாது கழிய வேண்டுமே என்று கடவுளைப் பிரார்த்தனை செய்தான். தான் மீண்டும் பார்க்கும் பாக்யமில்லாமல் ஒருகால் அவள் உயிர் போய்விடுமாயின்...என்பதை எண்ணும்போதே அவனை யறியாது கட்டு மீறிய துக்கச் சுழலில் சுழற்றுவது போலத் தோன்றி வதைத்தது. அன்றைய பிற்பகல் நேரமும், மாலை நேரமும், இரவு நேரமும் உன்மத்தங் கொண்டவன் போல அல்லாடிக் கொண்டிருந்தான். ஊணுறக்கத்தையே விரும்பவில்லை.

"அந்த மாதரசி.யார் வீட்டுப் பெண்ணோ! அவள் நம்முடைய உயிரை வதைக்கும் படியான காந்த சக்தியைக் கடவுள் காதலென்னும் பெயரால் அவளுக்கு அமைத்துள்ள அற்புதந்தான்

என்ன......நாளைக் காலையில் அவ் வீதியில் செல்கையில் அவள் இறந்து விட்டாள் என்ற செய்தியைக் கேட்போமோ!'' என்று பற்பல விதமான எண்ணங்களினுல் தவித்தவாறு இரவும் அவ் வீதியில் இரு முறை சென்று பார்த்த வண்ணம் கழித்தான்.

பொழுது விடிந்தது. வீதியில் சென்று பால்காரனைக் கண்டு விசாரிக்கையில் "இன்னும் உயிருபோகலே; இருக்குதுங்க. தாறுமாரு ஏதோ பேசுதாம். ஜன்னி போல அலறுதாம். ஏதோ சொல்ருங்க.'' என்ருன். அது கேட்டது முதல் சுகுமாரனுக்குத் தான் எப்படியாவது அந்த மின்னுளைக் காணுவிட்டால் தன் நிலைமை பிறர் எளிதில் கண்டு கொள்ளத் தக்க ஏளனமாகி விடும். எப்படியாவது சென்று பார்த்து விட்டுத் தான் வரவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான். அன்று அவனுக்குக் கலாசாலையில் கட்டாயம் செல்ல வேண்டிய பாடமாகையினுல் அதை விட முடியாமல் சென்ருன்.

பாடமாவது, படிப்பதாவது! மனமோரிடமும் காயமோரிடமும் தவம் செய்யும் மகா யோகீச்வரர்களைப் போல தவம் செய்யும் சுகுமாரன் கலாசாலை விடும் நேரத்தையே முக்கியமாக எதிர் பார்த்திருந்தான். மணி ஒன்றரையாயிற்று. கலாசாலையும் கலைவுற்றது. நேரே வீட்டிற்கு வந்தான். "அந்த மாதரசியின் உயிர் இருக்குமா! இந்நேரம் சரியாக 24 மணி சாவகாசம் ஆய்விட்டதல்லவா! இனி பிழைத்துக் கொள்ளலாகாதா! இன்னும் உயிர் இருக்கிற தென்கிற செய்தியைக் காதில் கேட்டால் போதும். கடவுளே! இந்த நற் செய்தியைக் காதில் கேட்க வைப்பாயா!'' என்று வேண்டிக் கொண்டே ஒரு முறை சென்று, அவ்வீதியில் விசாரித்தான். இன்னும் உயிரிருக்கிற தென்று தெரிந்ததும் அபாரமான சந்தோஷத்துடன் வீட்டிற்கு வந்தான்.

புல் சூட்டு (full suit) போட்டுக் கொண்டான். தலைக்கு ஓர் ஹாட்டு வாங்கி மாட்டிக் கொண்டான். கையில் ஒரு சிறிய பெட்டியை எடுத்துக் கொண்டு தன் ஸைகலில் திலகவதியின் வீட்டிற்குத் துணிகரமாக மீண்டும் வந்து, வீதியில் நின்று "சார்! சார்!'' என்று கூப்பிட்டான். இது கேட்ட கணபதி ஓடி வந்து "யார்?'' என்று விசாரித்தார்.

210040

சுகுமா:—ஐயா! இவ் வீட்டில் யாருக்கோ அம்மை வார்த்திருப்பதாக எங்களுக்குச் செய்தி கிடைத்திருக்கிறது. அவர்களை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போவதற்காக நான் பார்வையிட வந்திருக்கிறேன். யாருக்கு அம்மை வார்த்திருக்கிறது?

கணபதி:—ஐயோ! இதென்ன அனியாயச் செய்தி! எங்கள் வீட்டில் யாருக்குமே அம்மை வார்க்கவில்லையே! இது யார் தெரிவித்த செய்தி! எங்கள் வீட்டுக் குழந்தைகள் அதோ விளையாடுகிறார்கள். பெரிய பெண்ணுக்கு உடம்பு சரியில்லை. அதோ ஊஞ்சப் பலகையில் படுத்திருக்கிறாள். வெறும் சீக்கேயன்றி அம்மையொன்றுமில்லை. வேண்டுமானால் தாங்களே வந்து பார்த்து விட்டுப் போங்கள்.—என்று அழைத்தார்.

இந்த அமுத மொழிக்கே ஆவல் கொண்டு வந்த சுகுமாரன் பதில் பேசாது உள்ளே வந்தான். அங்கு விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளை முதலில் வெகுவாய்க் கவனிப்பது போலப் பார்த்து விட்டு உள்ளே சென்று தான் நாடி வந்த காதல் தெய்வம் கிடக்கும் அலங்கோலமான, பரிதாபகரமான சம்பவத்தைக் கண்டான். தனக்குப் பார்க்கும் பாக்யம் கிடைத்ததற்காக ஒரு புறம் சந்தோஷங் கொண்டான். அவளுடைய கோரமான காட்சியைக் கண்டு துக்கித்தான்.

திலகவதி தன்னிரை யழிந்தவாறு, "மாமி! நான் களவாடவில்லை. இது சத்தியம்! நான் கள்ளியல்ல, கபடியல்ல, மோசக்காரியல்ல. மாமி! மாமி!" என்று பிதற்றுகின்றாள். சுகுமாரன் அவள் தேகத்தில் அம்மையைக் கவனிப்பது போல பார்த்துக் கொண்டே, மனத்தில் பல்வேறு எண்ணங்களுடன் அசையாது நின்று விட்டான். கணபதியும் கணபதியாகத் தொப்பையுடன் நிற்கின்றார்.

Published by V. M. Parthasarathy Iyengar,
for "JAGANMOHINI" OFFICE
PRINTED AT THE TATA PRESS, MADRAS.

ஒரு அரிய சந்தர்ப்பம்

இனி ஸ்திரீகளும்
இன்ஷியூர் செய்யலாம்.

தற்போது நமது தேசம் மாறுபட்டுள்ள நிலைமையில், முன்னை விட அதிகமான ஸ்திரீகள் தங்கள் ஆயுளை இன்ஷியூர் செய்ய வேண்டியதின் அவசியத்தையும், அதற்கு வேண்டிய வசதிகள் அளிக்க முடியு மென்பதையும் கருதி,

யுனைடெட் இந்தியா
அஷியூரன்ஸ்
கம்பெனி லிமிடெட்

சில நிபந்தனைகளுக் குட்பட்டு, ஸ்திரீகளின் ஆயுள் இன்ஷியூரன்ஸ்களை இப்பொழுது ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கின்றது.

ஸ்திரீகளின் ஆயுள் இன்ஷியூரன்ஸ் சம்மந்தமான முழு விவரங்களும் தங்கள் கடிதம் கண்டவுடன் அனுப்பப்படும்.

படித்த ஸ்திரீகளிடமிருந்து இந்த கம்பெனியின் ஏஜண்டு பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தக் கம்பெனியின் ஏஜண்டாக இருப்பதால், நமது ஜன சமூகத்திற்குத் தொண்டு புரியவும், ஒரு நிரந்தரமான வருமானம் அடையவும் சந்தர்ப்பம் வாய்க்கின்றதென்பதைக் கவனியுங்கள்.

"யுனைடெட் இந்தியா"
கட்டடம்
செம்புதாஸ் தெரு,
சென்னை.

எம். கே. ஸ்ரீநிவாஸன்,
பி. ஏ., பி. எல்.,
மானேஜிங் டைரெக்டர்.

போலி மருந்துகளைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள்



குளிர்காய்ச்சல், பரு, இருமல், சுண்டு, உடைவு, தலைவலி காயம், தாடை வலி, முழங்கால் சுளுக்கு, இடுப்பு வலி கட்டி, நரம்பு நோய், பாரிச வாயு, கீல் வாயு, புண், பல்வலி ரணம் முதலியவைகளும், இன்னும் பலவித நோய்களும் வலிகளும்,

"ஜகன்மோகினி" யாய் விளங்கும்

அமிர்தாஞ்சனம்

உங்கள் கைவச மிருந்தால். பறந்து விடும்.

அமிர்தாஞ்ச டிபோ,

சென்னை கல்கத்த. பம்பாய்